உ








# ஞானச்சுடர்

## மாசி மலர் 2004








வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப்பண்பாட்டுப் பேரவை

உ



# குறள் வழி

'சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான்
இகல்வெல்லல் யார்க்கும் அரிது' (அவனை

பொருள்:-

தானெண்ணியவற்றைப் பிறர்க்கு ஏற்பச் சொல்ல வல்லனாகியும் சொல்ல வேண்டியவைகளை மறவாதவனாகிச் சபைக் கஞ்சாதவனாகியுமுள்ளவனைப் பகைவனாகக் கொண்டு வெல்லுதல் எவர்க்கும் அரிது (647)



# நற்சிந்தனை

## குதம்பாய் 1

ஓங்கார மேடையின் மேலேறி நின்றேன்
ஒன்றையுங் காணேனடி - குதம்பாய்
ஒன்றையுங் காணேனடி

தூங்காமல் தூங்குஞ் சுகம்வந்து வாய்த்தது
சும்மா விருந்தேனடி குதம்பாய்
சும்மா விருந்தேனடி

ஆங்காரம் போச்சுது ஆனந்தம் போச்சுது
அவனேநா னானேனடி குதம்பாய்
அவனேநா னானேனடி

நீங்காத நின்மல நிட்டை பலித்தது
நீநா னில்லையடி குதம்பாய்
நீநா னில்லையடி

தொடரும்...

# ஞானச்சுடர்



வெளியீடு :
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு-2 சுடர்-74

2004 மாசி

## பொருளடக்கம்

பக்கம்


| | |
|---|---|
| பிறவியெனும் மானுடரின் பெருநோயை..... | 1 - 2 |
| கடவுளின் கடிதம்..... | 3 - 4 |
| சங்கம வழிபாடு | 5 - 7 |
| அருணகிரி சுவாமிகள் அருளிய...... | 8 - 9 |
| மானுடத்தை மேன்மைப்படுத்தும்...... | 10 - 13 |
| மாசி மாதத்தை...... | 14 - 16 |
| முருக வழிபாடு | 17 - 21 |
| ஔவையார் அருளிச்செய்த நல்வழி | 22 - 23 |
| ஆட்கொண்டபோது | 24 - 25 |
| ஏழை மனம் உடைய என்னை...... | 26 - 27 |
| திருவருட் பயனின் வசனரூபம் | 28 - 30 |
| தமிழ் நாட்டு திருக்கோயில்கள் | 31 - 33 |
| செவ்வேற் சேஎய் | 34 - 36 |
| ஸ்ரீமத் சபாரத்தினம் | 37 - 38 |
| கௌரவிப்பு நிகழ்வு | 39 - 42 |
| சந்நிதியான் | 43 - 45 |
| நித்திய அன்னப்பணி | - 46 |


அன்பளிப்பு:- மலர் ஒன்று 30/- ரூபா

வருடச்சந்தா தபால்செலவுடன் 385/- ரூபா

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினர்.

அச்சுப்பதிப்பு:- சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.

# சரணம்! சரணம்! சந்நிதி முருகா!

## சரணம்! சரணம்!

சந்நிதி முருகா சரணம்! சரணம்!
சரவணபவனே சரணம்! சரணம்!
சண்முக நாதா! சரணம்! சரணம்!
சங்கரன் புதல்வா! சரணம்! சரணம்!

ஆறுமுக சுவாமியே! சரணம்! சரணம்!
ஆற்றங்கரை வேலவனே! சரணம்! சரணம்!
ஆறுபடை வீடுடையாய் சரணம்! சரணம்!
ஆதரித்து எமைக் காப்பாய் சரணம்! சரணம்!

வேலெடுத்து எம்வினை தீர்ப்பவனே சரணம்!
காலமெலாம் அண்டினோரைக் காப்பவனே! சரணம்!
மாலயனும் தேவர்களும் போற்றுவோனே! சரணம்!
கோலமயில் வாகனனே குமரேசா சரணம்.

சரணம்! சரணம்! சந்நிதிக்கந்தா!
சரணடைந்தோரைக் காத்திடும் நாதா!
சரணம்! சரணம்! சரணம்! சரணம்!
சந்நிதி முருகா! சரணம்! சரணம்!

நீர்வை மணி

# " ஞானச்சுடர் "
# தை மாத வெளியீடு

ஞானச்சுடர் சஞ்சிகையின் ஏழாவது ஆண்டின் முதல்மலரான தைமாத மலருக்கான மதிப்பீட்டுரையை ஆசிரியர் ஆ. சிவநாதன் அவர்கள் வழங்கினார்கள்.

எமது வாழ்க்கையில் நாம் தேட வேண்டிய செல்வம் அருட் செல்வம் என்பதை நாம் உணர்ந்து அதனைத் தேடுவதற்குரிய செயற் பாடுகளில் ஈடுபட வேண்டும் என்றும் அவ்வாறான அருட்செல் வத்தைத் தேடுவதற்கு இங்கே சந்நிதியான் ஆச்சிரமம், சைவகலை பண்பாட்டுப் பேரவை, அவர்கள் வெளியிடுகின்ற ஞானச்சுடர் சஞ் சிகை என்பன எல்லாம் எமக்கு துணையாக அமைந்திருக்கின்றது என்பதை திரு ஆ. சிவநாதன் அவர்கள் எடுத்துக்காட்டினார்கள். மக் கள் தற்பொழுது பொருட் செல்வத்தையே தேடுவதில் குறியாக இருப் பதாகவும் இந்த பொருட் செல்வம் அழிவடைந்து விடும் என்பதை யும் சபையில் உள்ளோருக்கு பக்குவமாக எடுத்துக் காட்டினார்கள்.

எமது சைவசமயம் காட்டுகின்ற உயர்ந்த நெறிமுறைகள் காலத்தால் மிகவும் முந்தியவை என்றும் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு காட்டிய அதே சமயநெறி முறைகள் இன்றும் எமக்கு பொருத்த மாக இருப்பதையும் எதிர்காலத்தில் ஐயாயிரம் வருடங்கள் சென்ற பின்பும் இவை மக்கள் வாழ்க்கைக்கு பொருத்தமாகவே இருக்கும் என்ற உண்மையையும் எடுத்துக் காட்டினார்கள்.

இத்தகைய சமயக் கருத்துக்களையே ஞானச்சுடர் மக்களுக்கு எடுத்துக் காட்டிவருகின்ற தென்பதை ஞானச்சுடர் சஞ்சிகையில் உள்ள ஆக்கங்களை உதாரணமாகக் காட்டி சபையினருக்கு விளக்கம் அளித்தார்கள்.

உ

# சுடர் தரும் தகவல்

இன்றைய வாழ்க்கை பொருள் தேடுவதைக் குறிக்கோளாகக் கொண்ட வாழ்க்கையாகவும், குழப்பங்கள் நிறைந்த வாழ்க்கையா கவும் இடம் பெற்றுள்ளதை நாம் காணமுடிகின்றது. இதனால் மனிதன் நிம்மதி இழந்து பல்வேறு துயரங்களை அனுபவித்துக் கொண்டிருப்பதையும் நாம் காணமுடிகின்றது அதே நேரம் இந்த நோய் எமக்கு ஏன் வந்தது எப்படி வந்தது என்று விளங்கிக் கொள்ளமுடியாது புற்று நோய் போன்ற உயிர் கொல்லி நோய்களால் சிறுவர் இளைஞர் யுவதிகள் என்ற வேறுபாடு இன்றி அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கின்ற மக்களுக்கு எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவை எல்லாம் சாதாரண விடயங்கள் போல் தெரிந்தாலும் ஆத்மீக நம்பிக்கையுள்ளவர்கள் இவற்றை எல்லாம் சாதாரண விடயங்களாக எடுக்கமாட்டார்கள்.

கடவுள் நம்பிக்கையுள்ளவர்கள் இவற்றிற்கான சாதாரண காரியங்களை ஆழமாகச்சிந்தித்தல் அறம் தவறாத வாழ்க்கையை மனிதன் வாழவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கொள்ளுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடத்தான் செய்கிறார்கள்.

அதுமட்டுமன்றி இவ்வாறான மனித அவலங்களை அதிக அளவிலும் ஆழமாகவும் சந்திக்க நேருகின்ற பொழுது சராசரி மனி தர்களாக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் கூட சில வேளைகளில் வாழ்க்கையின் உண்மையை உணர்ந்து தமது வாழ்க்கையைப் பக்குவப் படுத்துகின்ற நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன.

அண்மையில் மகரகம புற்று நோய் ஆஸ்பத்திரிக்கு சென்ற ஒரு அன்பர் அங்கே பல சிறுவர்கள் யுவதிகள் உட்பட எந்தப்பாவ மும் செய்யாத பலர் புற்று நோய்க்கு உட்பட்டு அதனால் அவர்கள் எதிர் நோக்கிக் கொண்டிருக்கின்ற துன்பங்களையும் கஷ்டங்களை யும் கண்டு வேதனைப்பட்ட அதே நேரம் அன்றாட வாழ்க்கையின் மிக மோசமான பாவமான காரியங்களைச் செய்து அடாவடித்தன மாக வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு எவ்வாறான பெரிய துன்பங்கள் காத்திருக்கின்றன என்று தனது உணர்வலைகளை எம்முடன் பகிர்ந்து கொண்டார்.

ஆம் சாதாரணமாக அனைவரும் தெரிந்து கொள்ளக்கூடிய இந்த உண்மையை நாம் உணர்ந்து அறத்தின் வழி எமது வாழ்க்கையை நெறிப்படுத்தி அனைவரும் உயர்வடைவோமாக.

உ

மாசி மாதசிறப்புப் பிரதி

# பெறுவோர் விபரம்

திரு த. விவேகானந்தன்
(சிவசத்தி பல்பொருள் வாணிபம், மந்திகை)

திரு நா. சந்திரசேகரம் (பொருளாளர்)
(வேவிலந்தை முத்துமாரியம்மன் தேவஸ்தானம், அல்வாய்)

திரு சி. பத்மநாதன் J. P
(கனன் போட்டோ பிரதி நிலையம், பருத்தித்துறை)

திரு பொ. ஸ்ரீஇராமச்சந்திரன்
(பொது முகாமையாளர் வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. ச)

திரு தா. கெங்காதரன்
(கஜன் மோட்டோர்ஸ் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)

திரு V.S.P. குமார் (ஸ்ரீகுமார்)
(உரிமையாளர் கல்பனா ஸ்ரோர்ஸ் அச்சுவேலி)

திரு சு. இராமச்சந்திரன் (நிர்வாகி)
(ரலன்ற் கல்வி நிறுவனம் கரவெட்டி)

திரு சி. சிவம்
(சிதம்பரப்பிள்ளை, புத்தகசாலை நெல்லியடி)

திரு வ நந்தகுமார்
( அம்மன் கோவிலடி. கரணவாய் தெற்கு)

உரிமையாளர்
(ஜெகா மோட்டோர்ஸ், நெல்லியடி)

திரு க. இரத்தினசிங்கம் J. P
(இளை. கிராமசேவையாளர் கரணவாய் மத்தி)

திரு க. குணலிங்கம்
(கரணவாய் மத்தி)

திரு என். இரவீந்திரன்
(மக்கள் வங்கி உதவி முகாமையாளர் உரும்பராய்)

திரு க. யோகேந்திரநாதன்
(கிராம உத்தியோகத்தர் குடத்தனை)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பு நிலையம்
(K. K. S. வீதி யாழ்ப்பாணம்)

திரு செ. சந்திரமூர்த்தி
(தலைவர் உடுப்பிட்டி ச. ச. நிலையம்)

திரு அ. க. த. கிருஸ்ணராஜா
(சமாதான நீதவான் உரும்பராய்)

திரு சி. பஞ்சலிங்கம்
(ஞான வைரவர் கோயிலடி. உரும்பராய் கிழக்கு)

செல்வி தெவேந்திரா சௌமியா
(ஒஸ்கா வீதி, உரும்பராய்)

திரு எஸ். கனகராசா
(அதிபர் அச்சுவேலி மத்திய கல்லூரி)

திரு இ. குமாரதாசன்
(இளை. பிராந்திய மருந்தாளர் யாழ்)

திரு சி. குகதாஸன்
(தேவாலய வீதி, சங்கானை)

உரிமையாளர்
(உதயா பேக்ஹவுஸ் வல்லை வீதி, சங்கானை)

தலைவர் - செயலாளர்
(விநாயகர் சனசமூக நிலையம் பத்தமேனி)

திருமதி த. சுரேந்திரநாதன்
(இளை அதிபர் மயிலியதனை தொண்டைமானாறு )

அதிபர்
(தொண்டைமானாறு வீ.ம. வித்தியாலயம்)

திருமதி சண்முகவடிவேலு
( எழுது வினைஞர் கல்வித் திணைக்களம் யாழ் )

திரு பொ. வீரபாகு
(பத்தமேனி அச்சுவேலி)

திரு சு. தங்கராசா J. P.
(சிறுப்பிட்டி)

திரு சி. மகாலிங்கம் J. P.
(மலையன் தோட்டம், கொற்றாவத்தை)

திரு சு. சிவதாசன் G. S.
(புன்னாலைக் கட்டுவன் வடக்கு)

தலைவர் - செயலாளர்
( கலைவாணி ச. ச. நிலையம் தொண்டைமானாறு)

திரு சு. செல்வரெத்தினம்
(K. K. S. வீதி, சுன்னாகம்)

உரிமையாளர்
( ஜெயகிருஸ்ணா K. K. S. வீதி, சுன்னாகம்)

உரிமையாளர்
( புகழ் ஸ்ரோர்ஸ் K. K. S வீதி சுன்னாகம் )

திரு ஐ. லோகஞானம்
(பிரதம அஞ்சல் அதிபர் சுன்னாகம்)

உரிமையாளர்
(மங்கை சில்க்ஸ் பட்டுச்சோலை சுன்னாகம்)

உரிமையாளர்
(உதயன் விற்பனை நிலையம் சங்கானை)

புவனேஸ்வரி பாலகிருஸ்ணன்
(தேவாலய வீதி, சங்கானை)

திரு அ. இராஜகோபால்
(271 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்)

கந்தையா வைத்தியநாதன்
(கிராம அலுவலர் சிறுப்பிட்டி)

வெங்கடாசலம் சுதர்சன் MBBS
(தம்பாலை அச்சுவேலி)

R. கமலநாதன் குடும்பம்
(லண்டன்)

A. V. முருகையா குடும்பம்
(அவுஸ்திரேலியா)

S. தியாகராஜா
(S. T. R. பிலிம்ஸ் கொழும்பு)

A. T. சிவனேசம்பிள்ளை
(இளைப்பாறிய பிரதி அதிபர் இடைக்காடு)

ஆ. விஸ்வலிங்கம்
(இளைப்பாறிய ஒவசியர் சுன்னாகம்)

செ. நவரெத்தினராசா J. P.
(கப்புது குப்பிளான்)

V. அரியராசா
( இளை, வரைவல்லுனர் )

உ

# பிறவியெனும் மானுடரின் பெருநோயை நீக்கவல்ல அருமருந்து விபூதி

சி. சி. வரதராசா J. P.

ஒவ்வொரு சமயத்திற்கும் சமயக் குறியீடுகள் உள்ளன. இவை அருவமாகவுள்ள கடவுளை அறிவுறுத்தி உணர்த்துவன. சைவ சமயிகளுக்குரிய சமயச் சின்னங்களாகத் தேனினும் இனியதிவ்ய மருந்துகளாக விபூதியும், உருத்திராக்கமும் விளங்குகின்றன. யாகங்கள் செய்கின்ற போது ஸ்மார்த்தர்களும் மதவர்களும் ஹோமத்திலிருந்து எடுக்கப்பட்ட பஸ்மத்தை அணிகின்றனர். விபூதியைக் குழைத்துத் திரிபுண்டரமாக இட்டுக் கொள்வதற்கு வேதங்களிலே மந்திரங்கள் உரியவாறு கூறப்பட்டுள்ளன இவ்விதம் நோக்கும் போது விபூதி வேத சம்பந்தமுடையது எனக் கொள்ளப்படுகின்றது.

மானதும் எல்லா உலகங்களையும் வசீகரிக்கக் கூடியதுமான தேனினும் இனிய திவ்ய மருந்து விபூதி என விபூதியின் பெருமையை மேற்குறிப்பிட்ட சுலோகம் விளக்குகிறது.

திருநீறு, பசிதம், பஸ்மம் சாரம், இரட்சை எனப் பல பெயர்கள் கொண்டு விபூதி அழைக்கப்படுகிறது. விபூதி கற்பம், அனுகற்பம், உபகற்பம், அகற்பம் என நால்வகைப்படும். விபூதி தரிக்கும் முறையானது உத்தூளனம், திரிபுண்டரம் என இரு வகைப்படும். வலது கைநடு மூன்று விரல்களாற் பூசும் முக்குறிகள் ஆணவம், கன்மம் மாயை, ஆகிய மும்மலங்களையும் நீக்கி ஞானம் பெறுவதைக் குறிப்பதாகும்.

"ஸ்ரீகரம்ச பவித்ரம்ச ரோக நிவாரணம் லோகேவசீகரம் புண்யம் பஸ் மத்ரைலோக்ய சாதனம்"

மிகத் தூய்மையானதும் மங்களத்தைச் செய்யக் கூடியதும் நோய்களையும் துக்கங்களையும் போக்கக்கூடியதும் மேலானதும் மூவுலகத்திற்கும் சாதன

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் சிவஞானமாகிய நெருப்பாற் சுட்டெரித்துப் புனித நிலையை ஆன்மா அடைவதே மானுட வாழ்க்கையின் பெரும் பயன் என்பதனை இது நினைவூட்டுகின்றது.

★ எண்ணத்தின் வலிமை - மனத்தின் மாயாஜாலம். ★

பாரம்பரியமான சிவபூமியில் வாழுகின்ற புனிதமான சைவப் பெருமக்களுக்குத் திருநீறு, உருத்திராக்கம், ஐந்தெழுத்து ஆகிய மூன்றும் அதிமுக்கியம் வாய்ந்தவை. இந்த மூன்றில் முன்னிற்பது திருநீறு என உணர்க திருநீற்றை ஒருவருக்குத் தரும் போதும், நாம் உள்ளன் போடு திருநீற்றைப் பூசிக்கொள்ளும் போதும் சிவபெருமானுடைய ஐந்தெழுத்து மந்திரத்தை அன்புடன் ஓதுதல் வேண்டும். திருநீற்றை நாம் அணியும் போது மந்திரத்தை உச்சரிக்க வேண்டும். திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த "திருநீற்றுப்பதிகம்" பதினொரு பாடல்களும் திருநீற்றின் மகிமையை எடுத்துக் காட்டுகின்றன. இதனால் தான் "மந்திரமாவது நீறு" என்றார் திருஞானசம்பந்தர் இவ்வாறு பதினாறு மந்திரங்களையும் நாம் புனிதமாகவும், உள்ளன்புடனும் ஓதி திருநீறு பூசிக்கொண்டால், நாம் செய்த பாவங்கள் வெந்து சாம்பராகி விடும்.

குழந்தையின் நோய்க்குத் தாய் மருந்துண்பது போல், மலை போலக் குவிந்து கிடக்கும் நம் வினைகளை நாம் அணியும் திருநீறு மட்டும் பொடியாக்க போதாது என்று சிவபிரான் தமது பெருங்கருணையினால் திருநீற்றைத்தம் உடலெங்கும் பூசுகிறார் எனச் சிவபிரானின் பெருங்கருணைத் திறன் இயம்பப்படுகின்றது.

இவ்விதம் எல்லாச் சிறப்புக்களும் பொருந்திய ஒளிமயமான இலட்சுமிகடாட்ச, மங்களகரமான விபூதியைச் சைவ சமயத்தவர்களாகிய நாம் அணிந்து உள்ளன்போடு புனிதமான சமய வாழ்வினைக் கைக்கொண்டு மேன்மையடைவோமாக.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

---

6. சிவபெருமானுக்கு ஏன் வைத்தியநாதன் என்று பெயர்? (தொடர் திருவருளாகிய மருந்தைக் கொடுத்ததால்.
7. திருக்கோபுரத்தின் வேறு பெயர்?
   தூல லிங்கம்.
8. திருக்கோபுரத்துக்கு அருகாமையில் யாருக்கு கோயில் உண்டு?
   சங்கநிதி பதுமநிதிக்கு.
9. திருக்கோயிலில் நாம் முதல் யாரை வணங்க வேண்டும்?
   விக்கினேஸ்வரரை.
10. சண்டேஸ்வரரை எப்படி வணங்கல் வேண்டும்?
    கைதட்டி வணங்கல் வேண்டும். (தொடரும்...

★ கண்ணீரில்லாத துக்கம் உள்ளே உதிரம் வடிக்கும். ★

[தொடர்ச்சி...

# கடவுளின் கடிதம்

அ. சுப்பிரமணியம்

"பையணி மிடற்றினானை, மதுரை நாயகனை, வந்தித்
தையனே யடியேற்கின்றுன் அருட்டுணை செய்யல் வேண்டும்
மெய்யனே யென்று போற்றி வேண்டிக் கொண்டன்பு தோய்ந்த
பொய்யறு மனத்தானில்லம் புக்கினிதிருந்தா னிப்பால்" என்கிறார்.

பாணபத்திரனது வேண்டுதலுக்குதவ முன்வந்த சோமசுந்தரர் விறகு வெட்டியாகி ஏமநாதன் தங்கியிருந்த வீட்டு வாசல் திண்ணையில் விறகினை வைத்து இசை மீட்டிச்சாதாரிப் பண் பாடினார். அது கேட்டு வந்த ஏமநாதனிடம் தம்மை யாழ் வல்லோனாகிய பாணபத்திரனுடைய அடிமை என்று அறிமுகம் செய்தார். அத்தோடு,

"தசையெலா மொடுங்க மூத்தாய், இனியிசைக் கிழமைக்காகா
யென்றெனைத் தள்ளி விட்டான்" என்றும் கூறினார்.

இதன் மூலம் பாணபத்திரனது இசைத்திறனை ஓர்ந்து, கொண்ட ஏமநாதன் இரவோடு இரவாக மாணாக்கருடன் ஓடிச் சென்று விட்டான். அதே நேரம் பாணபத்திரனின் கனவில் தோன்றி விறகாளாய்ச் சென்று ஏமநாதனை மிரண்டோடச்செய்தமையை உணர்த்தினார். விடிந்ததும் அரசவைக்குச் செய்தி பரவியது. பாணர் மூலம் சிவன் திருவிளையாடலை உணர்ந்த வேந்தன் "பாணரை இறைவனையே பாடும் பணிக்கு" அனுப்பி வைத்தார். இதனை "இன்று தொட்டு உமக்கு வேத நாதனைப் பாடுதலே கடனென விடுத்தான்" என வரகுண பாண்டியன் கூற்றாக மிகநயம்பட ஓதுகின்றார் பரஞ்சோதி முனிவர்.

"இனிமதி யெமக்கீ தென்னா யாழ்வல்லோன் அன்று தொட்டுப்
பனிமதி மருமான் கோயிற் பாணிசைக்கிழமை நீத்துக்
குனிமதி மிலைந்த நாதன் கோயில் முப்போது மெய்திக்
கனிமதி யன்பிற் பாடுங் கடப்படு நியமம் பூண்டான்"

தன்னம்பிக்கை உடையவர்களாக இருங்கள்.

அதனால் வறுமையில் வாடினான். இது கண்ட ஆலவாயான் அடியவர் குறை தீர்த்தற் பொருட்டு பாண்டியன் களஞ்சியத்தில் திருடி வந்து பாணரின் வறுமை போக்கினார். அவ்விதம் கிடைத்த பொருளை உறவினர்க்கும் அறவழியிலும் செலவிட்டார். சில நாள், இறைவன் பொருள் கொடாமையால் பாணரும் சுற்றமும் பசியால் வாடிற்று. பாடல் வல்லானது துயர் தீர்க்கக் கருதிய ஆடல் வல்லோன் பாணபத்திரனின் கனவிலே தோன்றி,

'' நின்போல் அன்பகத் தெம்மை வைத்த தேமரு போந் தின் கண்ணிச் சேரமான்றனக் கிப்போது நாமொரு முடங்க நீட்டி நல்குவம் போதியென்னா: உரைத்து ''


'' மறைக்குரை செய்த வாக்கான் மதிமலி புரிசை யென்னுஞ்
சிறப்பியல் சீர்சால் செய்யுட் பாசுரஞ் செப்பித்தீட்டிப்
பிறைச்சடைப் பெருமான் நல்கி மறைந்தனைப் பெரும் பாண் செல்
உறக்க நீத்தாடிப் பாடியுவகை மாகடலில் ஆழ்ந்தான் '' [வன்

அது மட்டுமன்றி சேரமன்னன் கனவில், கடிதம் கொண்டு வருபவருக்குப் பொருள் கொடுத்தனுப்பும் படியும் சொல்லி வைத்தார். திருமுகத்தைப் பட்டாடையில் சுற்றிச் சேர நாடடைந்து தர்ம நீர்ச் சாலையில் தங்கியிருந்தயாழ்கைவந்த பாணபத்திரரை அழைத்து உபசரித்து ஓலை வாங்கிக் கண்களில் ஒற்றி ஆனந்தக் கண்ணீர் சொரிந்து யானை மேலேற்றி ஊர்வலம் செய்து வேந்தர் வேந்தனாய சேரமன்னன் தன் பொற்களஞ்சியக் கபாடம் திறந்து பாணபத்திரரை அழைத்துக் காட்டி '' எம்பெருமானுடைய திருத்தொண்டரே, இத்திரவியம் முழுவதையும் நீரே கைக்கொண்டு போம்'' என்று வேண்டினான். பொருள் பெற்றுக் கொண்ட பாணபத்திரன் மதுரையை அடைந்து இன்புற்று வாழ்வாங்கு வாழ்ந்தான்.

எல்லாம் வல்ல பரம் பொருள் ஏமநாதனை வெல்லும் தகைமையைப் பாணபத்திரனுக்கு வழங்காது விறகாளரானதும் வேண்டும் பொருள் கிடைக்காது வறுமைப்பட வைத்ததும் சேரமன்னனுக்கு ஓலை கொடுத்தனுப்பியதும் ஏன்? என்ற கேள்வி எழுகின்றது. இங்குதான் முப்பொருள் உண்மையும் சைவ சித்தாந்தக் கருத்தும் வெளிப்படுகிறது. ஏமநாதனது செருக்கை அடக்கியமை ஆணவ நீக்கம் வறுமையில் 'வாடியமை கன்மபலன். சேரனிடம் பொன் பெற்றமை மாயா மலம். ஆன்ம ஈடேற்றத்திற்காக இறைவன் நடாத்தும் திருவிளையாடலே இவையெனலாம். (முற்றும்)

★ அறிவும், அறியாமையும் சேர்ந்ததே மனம். ★

1998 ம் ஆண்டு தொடக்கம் 2003ம் ஆண்டு வரை வந்த ஞானச்சுடர்மலருக்கு தொடர்ந்து ஆக்கங்களை வழங்கியோரில் மூத்த எழுத்தாளராகிய ந.சிவபாதம் (புத்தொளி)அவர்களுக்கு உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் அவர்களால் பொன்னாடை போர்த்தப்பட்டு நினைவுப் பரிசு வழங்கும் நிகழ்வு



2000,2001,2002,2003,-ம் ஆண்டுகளில் வெளிவந்த ஞானச் சுடர் மலர்களுக்கு ஆக்கங்களை வழங்கியோரில் ஒரு பகுதியினரை கௌரவித்த நிகழ்வு



# சங்கம வழிபாடு

செல்வி ப. ருத்திராதேவி

வழிபாடு மூன்று பிரிவாக வகுக்கப்பட்டுள்ளது. அவை யாவன குருவழிபாடு இலிங்க வழிபாடு சங்கம வழிபாடு என்பன ஆகும். இவற்றில் சங்கம வழிபாட்டினை எடுத்து நோக்குவோம். சிவ பெருமானை வழிபடுதல் ஒன்றே யன்றி வேறெதிலும் கருத்தூன் றாது எல்லாம் சிவன் செயல் எனத் தம்மைச் சிவனுக்கு அர்ப் பணித்து வாழும் அடியவர்கள் சங்கம அடியவர்கள் எனப்படு வர். இவருள் நிருவாண தீக்ஷிதர், விசேஷ தீக்ஷிதர், சமயதீக்ஷிதர் என்னும் முத்திறத் துச் சிவபக்தரும் அடங்குவர். சேக்கிழார் பெரியபுராணத்திலே "திருக்கூட்டச்சிறப்பு" என்னும் பகுதியில் இவர்களின் பெருமை யையும் உயர்வையும் போற்றிப் பாடுகின்றார். இறைவனே இவர் களுள்ளே ஒடுங்கியிருப்பதால் இவர்களைச் சிவமாகவே பாவித்து வழிபாடியற்றலும், உணவு முதலிய அளித்துப் பேணலும் சைவமக்களின் தலை யாய கடமை எனச் சிவாகமங் கள் எடுத்தியம்புகின்றன.

இவர்கள் உருத்திராக்கமணி மாலையை அணிந்திருப்பர். உடம்பிலே தூயவெண்ணீறு பூசி யிருப்பர். இவர்கள் பூசியிருக்கும் திருநீற்றைப் போலவே இவர் களுடைய உள்ளமும் தூய்மை யானது. இவர்கள் ஞான ஒளி யைப் பரப்புவார்கள் என்பதை

"ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணியலது ஒன்றிலார்
ஈர அன்பினர் யாதும் குறைவிலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ?" எனவும்
"கூடும் அன்பினிற் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்" எனவும்
சிறப்பித்துப்பாடுகின்றார் சேக்கிழார் சுவாமிகள்.

"தொண்டர்குலமே தொழு தகுகுலம்" என்றும், "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என் றும் அடியார்களின் பெருமை

பேசப்படுகின்றது. சங்கமவழி பாட்டின் பெருமையை உணர்ந்த நாவுக்கரசர் இறைவனின் அடியவர்கள் எக்குலத்தவராயினும் எந்நோய் உள்ளவராயினும் அவரை நாம் வழிபட வேண்டும் என்பதை

சங்கநிதி, பதுமநிதி இரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போமல்லோம்
மாதேவர்க் கேகாந்தர் அல்லா ராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவுளாரே

என்ற திருத்தாண்டகத்தின் மூலம் அறிவுறுத்துகின்றார்.

''அடியார்க்கும் அடியேன்'' என மனங்கசிந்து பாடிய சுந்தர மூர்த்தி சுவாமிகளைப் பின்பற்றிச் சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் புராணம் தொண்டர் தம் பெருமையினை மிகவிரிவாக எடுத்துரைக்கின்றது. தொண்டரின் சிறப்பு நோக்கி அதற்குப் பெரியபுராணம் என்ற பெயரும் உண்டு. இது ஏனைய புராணங்களுக்கு இல்லாத சிறப்பாகும். உதாரணமாகக் கந்த புராணம் பதினாயிரத்துக்குமேற்பட்ட பாடலைக் கொண்டிருப்பினும் 'பெரிய' என்ற அடைமொழி இல்லை. எனவே சிவனடியார்களின் சிறப்பைக் கூறுவதால் திருத்தொண்டர் புராணத்தைப் ''பெரியபுராணம்'' எனச் சிறப்பித்துக்கூறுவர்.

உவர்மண் காய்ந்த கோலத்தில் முன்னால் வந்த ஏகாலியனைத் தனது யானையிலிருந்து இறங்கி ''அடியேன் அடிச்சேரன்'' என வணங்கிச் சிவனடியாருக்கும், சிவசின்னத்திற்கும் மதிப்பளித்த சேரமான் பெருமாள் நாயனாரதும்.

''மெய்யெலாம் நீறுபூசி வேணிகள் முடித்துக்கட்டி
கையினிற் படைகரந்த புத்தகக் கவளி ஏந்தி''

தம்மைக்கொல்ல வந்த முத்தநாதனையும் அவனது சிவனடியார் கோலத்திற்காகத் '' தத்தா நமர் '' என்று சொல்லிக் காத்தருளிய மெய்ப் பொருள்நாயனாரதும் சங்கமபக்தி அளவிடற்கரியது. இதனையே சிவஞானபோதமும்.

''மாலறநேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரன் எனத்தொழுமே'' எனக் கூறுகின்றது.

★ அமைதி நிறைந்த வாழ்க்கையே வாழ்க்கை. ★

திருநாவுக்கரசரைச் சந்திக்க வந்த திருஞானசம்பந்தரின் சிவிகையை அப்பர் தாமும் சுமந்து சென்ற போது ''அப்பர் எங்குள்ளார்?'' என்ற சம்பந்தருக்கு உம்மடியேன் உம்மடிகள் தாங்கி வரும் பெருவாழ்வு எய்தப்பெற்று இங்குற்றேன்'' எனக் கூறியதும் அப்பூதியடிகள் நாவுக்கரசரைப் பெயரளவில் மட்டும் அறிந்திருந்தும் தம்பிள்ளைகளுக்கு மூத்த திருநாவுக்கரசு, இளைய திருநாவுக்கரசு எனப் பெயரிட்டதோடு தாம் செய்த அறப்பணிகளுக்கு அவருடைய பெயரைச் சூட்டியதும் சங்கம வழிபாட்டின் உயர்நிலையை எடுத்துக் காட்டுகின்றது.

திருநீறுபூசிய சிவனடியார்களைக் கண்டால் அவர்களைச் சிவன் எனவே பாவித்து வணங்க வேண்டும் என்பதை,

'' எவரேனுந் தாமாக விலாடத் திட்ட திருநீறுஞ்
சாதனமுங் கண்டாலுள்கி
உவராதே யவரவரைக் கண்ட போது
உகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவ ரென்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கரவாதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே'' என்ற திருத்

தாண்டகத்தின் மூலம் அப்பர் சுவாமிகள் எடுத்துரைக்கின்றார்.

அடியவர்களின் உள்ளக்கமலத்தில் இறைவன் உவந்து வீற்றிருப்பான் முருகப்பெருமான் ஔவைப்பாட்டியிடம் பெரியது எது? எனவினவியபோது 'பெரிது பெரிது புவனம் பெரிது... என்று தொடங்கி இறுதியில் ''தொண்டர் தம்பெருமை சொல்லவும் பெரிதே'' எனச் சிவனடியார்களின் சிறப்பை விளக்கியுள்ளார்

அறுபத்துமூன்று நாயன்மார்களில் சிவனடியாரை வழிபட்டு முக்தி பெற்றோர்களாக இயற்பகை நாயனார், மெய்ப்பொருள் நாயனார், இளையான்குடி மாறநாயனார், திருநீலகண்டநாயனார், அமர்நீதிநாயனார், விறன்மிண்ட நாயனார், முனையடுவார் நாயனார், நேச நாயானர், இடங்கழிநாயனார், நரசிங்கமுனையரைய நாயனார், ஏனாதிநாதநாயனார், புகழ்ச் சோழ நாயனார், காரைக்கால் அம்மையார், திருக்குறிப்புத் தொண்ட நாயனார், சிறுத் தொண்ட நாயனார், மானக் கஞ்சாற நாயனார், கலிக்காம நாயனார், சக்திநாயனார்என்போர் ஆவர்.

என்வே சங்கம்வழிபாட்டால் உள்ளம் தூய்மைபெற்று உயர்நிலையை அடைவோமாக.

★ வறுமையின் திறவுகோல் சோம்பல் ★



# அருணகிரி சுவாமிகள் அருளிய கந்தரலங்காரம்

பண்டிதர் சி. வேலாயுதம்

## முருகனது மயில் வாகனத்தின் வேகம்

குசைநெகி ழாவெற்றி வேலோ னவுணர் குடர்குழம்பக்
கசையிடு வாசி விசைகொண்ட வாகனப் பீலியின்கொத்
தசைபடு கால்பட் டசைந்தது மேரு வடியிட வெண்
டிசைவரை தூள்பட்ட வத்தூளின் வாரி திடர்ப்பட்டதே.

வெற்றி பொருந்திய வேற்படையையுடைய முருகனின், கடிவாளத்தினின்றும் அகலாததும், சவுக்கால் ஒய்ச்சப்பெற்றதும், அசுரரின் குடல் கலங்குமாறு மிகவேகங் கொண்டெழுந்ததுமாகிய, (குதிரை) வாகனம் என்னும் மயிலின் தோகைத் தொகுதி அசைவதால் எழும் காற்றானது பட்டு மகாமேரு மலையும் அசைந்தது. அந்த மயில் அடி பெயர்த்து நடப்பதால் எட்டுத்திசைகளிலும் அமைந்த மலைகள் துகளாயின. அது மாத்திரமன்றி அந்தத் துகளினாற் கடலும் மேடாயிற்று.

குசை - கடிவாளம், கசை - சவுக்கு.

## சேவற்கொடியின் வலிமை.

படைபட்ட வேலவன் பால்வந்த வாகைப்பதாகையென்னும்
தடைபட்ட சேவல் சிறகடிக் கொள்ளச் சலதிகிழிந்
துடைபட்ட தண்ட கடாக முதிர்ந்த துடுபடல்
மிடைபட்ட குன்றமு மாமேரு வெற்பு மிடிபட்டவே.

பகைவரை அழிக்கும் தன்மை கொண்ட வேற்படையைக் கைக்கொண்ட முருகனிடத்து வந்த, வெற்றிக் கொடி என்று பேசப்படும் மேலோங்கிய சேவலானது தனது சிறகுகளை அடிக்கும்போது, கடல்களின் நீர்ப்பரப்பு கிழிந்து உடைந்தது, உலகின் உச்சியென்று கூறப்படும் அண்டகடாகம் உதிர்ந்தது. நட்சத்திரக்கூட்டம் நிலை பெயர்ந்தது, பெரிய மேருமலையும் ஏனைய மலைகளும் இடிந்தன.

(படை (படுப்பது) அழிப்பது, வாகை - வெற்றி,
பதாகை - கொடி, சலதி - கடல், உடு - நட்சத்திரம்.

★ மனச்சான்றின் மகிழ்ச்சியே உண்மையான இன்பமாகும். ★

## கிண்கிணியின் மகத்துவம்

ஒருவரைப் பங்கி னுடையாள் குமார னுடைமணிசேர்
திருவரைக் கிண்கிணி யோசை படத்திடுக் கிட்டரக்கர்
வெருவரத் திக்குச் செவிடுபட் டெட்டுவெற் புங்கனகப்
பருவரைக் குன்று மதிர்ந்தன தேவர் பயங்கெட்டதே.

ஒப்பற்ற சிவபெருமானை வலப்பக்கத்தில் உடையவளாகிய உமையவள் திருக்குமாரனாகிய முருகனின் ஆடையின் மேல் அணிந்திருக்கும் மேகலாபரணங்களுடன் பொருந்திய அழகிய இடுப்பிற் தரிக்கப்பெற்றுள்ள கிண்கிணியின் ஒலி முழங்கியவுடனே, அசுரர்கள் திடுக்கிட்டுப் பயப்படவும் திசைகளில் உள்ளவர்களின் காதுகள் செவிடுபடவும், கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி, கந்தமாதனம் ஆகிய குலபர்வதங்களும் பெரிய மலையெனக் கருதப்படும் பொன்மயமான மேருகிரியும் அதிர்ச்சி அடையவும், தேவர்களின் அச்சம் அகன்றது.

ஓருவர் - சிவன், வெருவுதல் - பயப்படுதல்

## ஈடேற்ற வேண்டுதல்

குப்பாச வாழ்க்கையுட் கூத்தாடு மைவரிற் கொட்படைந்த
இப்பாச நெஞ்சனை ஈடேற்று வாயிரு நான்குவெற்பு
மப்பாதி யாய்விழ மேருங் குலுங்கவிண் ணாருமுய்யச்
சப்பாணி கொட்டிய கையா றிரண்டுடைச் சண்முகனே.

எட்டுக் குல மலைகளும் பாதி பாதியாய்ப் பிளந்து விழவும், மேருமலை அதிரவும், தேவர்கள் பிழைக்கவும், சப்பாணி கொட்டிய பன்னிரு திருக்கரங்களையுடைய சண்முகனே! ஆசை பொருந்திய இவ்வுலக வாழ்க்கையுள் அகப்பட்டுக்கூத்தாடுபவனும், ஐம்புலன்களிற் கட்டுண்டு சுழற்சியடைபவனுமாகிய இப் பாசமுடையவனாகிய என்னைக் காத்து ஈடேற்றுவது உன் கடமையேயாகும்.

கு - உலகம், பாசம் - கட்டுப்படுத்துவது, கொட்பு - சுழற்சி.

[தொடரும்.....

உ

# மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

(மகாபாரதத்திலிருந்து)

# அசுவத்தாமா சீற்றம்

வ. குமாரசாமி ஐயர்

துரோணாச்சாரியார் உயிர் நீத்தார் என்பதனை அறிந்து கொண்ட கௌரவ சேனைகள் சிதறி ஓடத்தொடங்கின. இதனை வேறொரு புறத்திற் போரிட்டுக்கொண்டு நின்ற அசுவத்தாமன் கவனித்தான் கௌரவசேனை கலைந்து ஓடுவதனைக் கவனித்த அசுவத்தாமன் அதன் காரணத்தைத் துரியோதனனிடம் வினாவினான் துரியோதனன் பதில் ஏதும் உரைக்காது கண்களிலிருந்து கண்ணீர் பெருக மௌனமாக இருந்தான். அருகே நின்றிருந்த கிருபர், துரோணர் மாண்ட செய்தியினை விபரமாக எடுத்துரைத்தார் யுதிஷ்டிரர் உரைத்த பொய்யுரையினாற் தன் தந்தை இறந்துவிட்டார் என்பதனை அறிந்து கொண்ட அசுவத்தாமன் வேதனையுடன் பெருஞ்சீற்றம் அடைந்தான். தனயனாகிய தான் உயிருடன் இருந்தும் தந்தையைக் காப்பாற்ற முடியவில்லையே என்ற ஆதங்கமும் அவனுள் எழுந்தது. ஆதங்கமும் வேதனையும் சேர்ந்து அவனை ஆக்ரோஷம் கொள்ளச் செய்தது ''எனது தந்தை வீரமரணம் அடைந்தமைக்கு நான் வருந்தவில்லை. அவரை வஞ்சனையாற் கொன்றார்கள் என்பதனை அறியும் போது எனது உள்ளம் கொதிக்கிறது. எனது தந்தையைக் கொன்றவர்களை நான் பழிக்குப் பழிவாங்காது விடப்போவதில்லை. என்னிடம் இருக்கும் நாராயண அஸ்திரத்தைப் பிரயோகித்து அனைவரையும் அழித்தொழிப்பேன்'' என்று பெருமுழக்கம் செய்தான்.

அசுவத்தாமனின் இக்கூற்றினைச் செவிமடுத்த கௌரவ சேனைகள் ஊக்கம் பெற்று மீண்டும் போரிட முன்வந்தன. கௌரவ சேனைகள் மீண்டும் உற்சாகத்துடன் போரிடக் களம் புகுந்தமையைக் கண்ட அர்ச்சுனனும் பீமனும் ஒன்று சேர்ந்து அசுவத்தாமனை எதிர்த்து யுத்தம் செய்தனர்.

★ அளவு கடந்த பற்று மாயை எனப்படும். ★

அசுவத்தாமன் பெருஞ்சீற்றத்துடன் உக்கிரமாகப் போரிட்டான். முடிவில் மிகவும் சக்திவாய்ந்ததாகிய நாராயண அஸ்திரத்தை முறைப்படி பூஜித்துப் பாண்டவ சேனை மீது ஏவலானான். யுத்தகளம் எங்கும் ஆயுதங்கள் பாம்பு வடிவில் சீறிப்பாய்ந்தன. கணக்கற்ற அஸ்திரங்களாக எங்கும் பெருகி அனைவரையும் நடுங்க வைத்தன. இதனைக் கவனித்த கண்ணபிரான் விரைந்து செயற்பட்டு அனைவரையும் ஆயுதங்களைக் கீழெவீசிவிட்டுத் தேர்களில் இருந்து இறங்கி நிராயுதபாணிகளாக நிற்கும் வண்ணம் கட்டளை இட்டார். அர்ச்சுனன் பீமன் முதலான அனைவருமே தேர்களில் இருந்து இறங்கி ஆயுதங்களைக் கைவிட்டு நிராயுதபாணிகளாக வெறுமனே நின்றுகொண்டிருந்தனர். நாராயண அஸ்திரத்தினால் நிராயுதபாணிகளை ஒன்றும் செய்ய முடியாது என்பதனை அறிந்த கண்ணபிரான் இட்டகட்டளையினாற் செயலிழந்த நாராயண அஸ்திரத்திலிருந்து பாண்டவர்களும் பாண்டவ சைன்யங்களும் தப்பித்துக் கொண்டன.

நாராயண அஸ்திரம் செயலிழந்ததனாற் சீற்றமடைந்த அசுவத்தாமன் மீண்டும் கடுமையாகப் போரிட்டான். நாராயண அஸ்திரத்தை மீண்டும் பிரயோகிக்கும்படி துரியோதனன் வேண்டிக்கொள்ள, அதனை ஒரு தடவைக்கு மேற் பிரயோகிக்கலாகாது என்ற முறைமையை எடுத்துக்கூறிய அசுவத்தாமா உக்கிரமாகப் போரிடலானான். திட்டத்துய்மன் அவனை எதிர்த்தான். அவனை எதிர்கொள்ள முடியாது திட்டத்துய்மன் ஒருபுறம் ஒதுங்கிக் கொள்ள சாத்யகி அசுவத்தாமனை எதிர்கொண்டு போரிட்டான். சாத்யகியாலும் அவனுடன் போரிட முடியாத நிலை வந்தபொழுது பாண்டவசேனை சிதறியோடமுற்பட்டது. அதனைக் கவனித்த அர்ச்சுனன் களம் புகுந்து அசுவத்தாமனை எதிர்க்கலானான். அர்ச்சுனனின் ஆற்றல் மிக்க போரினால் அவன் ஊக்கம் குறைந்தவனாய் ஒதுங்கமுற்பட்டான். அவ்வேளை இருளும் பரவத்தொடங்கியது. அத்துடன் அன்றைய போரும் நிறுத்தப்பட்டது.

துரோணர் கொல்லப்பட்ட அன்றைய இரவில் துரியோதனன் முதலானோர் ஒன்றுகூடி ஆலோசனை செய்தனர். பெரும் வீரர்களாகிய பீஷ்மர் துரோணர் முதலானோரை இழந்தமை கௌரவர்களுக்குப் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியது. இனி எஞ்சி இருப்பவன் கர்ணனே என்பதனை அவர்கள் தீர்மானித்துக் கொண்டனர். எனவே கர்ணனை சேனாதிபதியாக்கிப் போரினை

முன்னெடுத்துச் செல்லலாம் எனஅசுவத்தாமன் ஆலோசனை கூறலானான். அசுவத்தாமனின் ஆலோசனையை மகிழ்வுடன்ஏற்றுக் கொண்டான் துரியோதனன் கர்னனை நோக்கிக் ''கர்னா, பெரும் ஆற்றல் படைத்தவனாகிய உன்னை நான் எனது படைகளுக்குச் சேனாதிபதியாக நியமிக்கின்றேன். நீ பதவி ஏற்றுப் போரிட்டுப் பகைவர்களை வதம் செய்து எனக்கு வெற்றியீட்டித்தருவாய் என்று நம்புகிறேன்'' என்று துரியோதனன் கூறலானான். மகிழ்வுடன் அதனைக் கர்னன் ஏற்றுக்கொண்டான்.

## பதினாறாம் நாட் போர்

அதன் வண்ணம் கர்னனுக்குச் சேனாதிபதி பட்டம் சூட்டி அபிசேகம் செய்தனர். வெற்றி பெறுக எனஅனைவரும் அவனை வாழ்த்தினர். கர்னன் சேனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளான் என்பதனை அறிந்து கொண்ட பாண்டவர்கள் அர்ச்சுனன் தலைமையிற் போரினை மேற்கொள்ளத் தீர்மானித்தனர். பதினாறாம் நாட் பொழுது புலர்ந்தது. கர்னன் மிக்க உற்சாகத்துடன் படைகளை மகர வியூகமாக வகுத்துப் போரிட ஆயத்தமானான் கர்னன் மகர வியூகமாகப் படைகளை அணி வகுத்தமையைக் கண்ட அர்ச்சுனன் தனது படைகளை அர்த்த சந்திரவியூகமாக வகுத்துக் கொண்டான்.

போர் ஆரம்பமாயிற்று இரு தரப்புப்படைகளும் மிக்க உற்சாகத்துடன் போரில் ஈடுபட்டன பீமனும் அர்ச்சுனனும் கர்னனை ஆக்ரோஷத்துடன் எதிர்த்தனர் கர்னனும் சளைக்காது போரிட்டுக் கொண்டிருந்தான். பின்னர் பீமன் அசுவத்தாமனுடன் போரிட்டான். கர்னனுடன் யுதிஷ்டிரர் போரிட்டார். கர்னனின் ஆற்றலைக் கண்ட யுதிஷ்டிரர் திறமையாகப் போரிடவே கர்னன் களைப்படைவதனைக் கண்ட துரியோதனன் யுதிஷ்டிரரை எதிர்த்தான் யுதிஷ்டிரர் துரியோதனன் எதிர்ப்பதனைக் கண்டு கோபமடைந்தவராய் மூர்க்கமாகப் போரிட்டுத் துரியோதனனின் தேரினைச் சிதைத்து அவனை நிராயுதபாணியாக்கினார். இதனாற் கோபமடைந்த துரியோதனன் கதாயுதத்தைக் கையிலெடுத்துக் கொண்டு யுதிஷ்டிரரைத் தாக்க விரைந்தான். இதனைக் கவனித்த யுதிஷ்டிரர் சக்தி ஆயுதத்தைப் பிரயோகித்துத் துரியோதனனைக் கொல்ல முயன்றார். அவ்வேளை அசரீரி வாக்கு ஒன்று ''துரியோதனனைக் கொல்லுவதற்குப் பீமன் சபதம் செய்துள்ளான் எனவே அவனை நீ வதஞ் செய்ய வேண்டாம்'' என்று ஒலித்தது

இதனால் யுதிஷ்டிரர் துரியோதனனைக் கொல்லாது விட்டார்

அர்ச்சுனனும் பீமனும் யுதிஷ்டிரரும் உக்கிரமாகப் போரிட்டமையாற் கௌரவ சேனை மிகவும் கலக்கமுற்றது பாண்டவசேனை வெற்றிக் களிப்புடன்போரிட்டது. இந்நிலையில் மாலைவேளை வந்தமையாற் போர் நிறுத்தப்பட்டது இந் நிலையிற் பதினாறாம் நாட் போர் பாண்டவர்கட்குக் களிப் பூட்டும் வகையில் முடிவடைந்தது.

(தொடரும்...

## சும்மா (தியானம்) இருப்பதே சுகம் (ஞானம்)

நமது மனத்தை சதா காலமும் பயனற்ற பலசிந்தனைகளினால் அலைபாய விடுவதனால் எந்தப் பலனும் கிடையாது போலியான மனத்துடன் ஆன்ம சுகம் இன்று வரும் நாளை வரும் என்று இறுமாந்து என்றுமே கிடைக்காத நிலையில் ஏமாற்றமுற்று மனத் தூய்மையற்று வீணாகக் காலத்தை கழிப்பதனால் என்னபயன்?

நீக்கமற அண்டவெளியான ஆகாயத்தைப் போல் தன்மனத்தினை ஒருநிலைப்படுத்தி மனம் சமநிலையை எய்தியபோது ஆன்மசுகம் அடைவது திண்ணம். சும்மா (தியானம்) இருப்பது என்பது மட்டும் பெரிது அல்ல. அந்த நிலையை (சும்மா) மனத்தை எதன் பொருட்டும் அலைபாய விடாமல் வைராக்கிய சிந்தையுடன் இருக்கப் பழகிவிட்டால் ஆண்டவனின் அருளால் உலக நிகழ்வுகளை (சும்மா) தியானத்தில் இருந்து கொண்டே மனக்கண்ணால் காணலாம்.

பரம் பொருளான இறைவனுடன் சிந்தையை ஐக்கியப் படுத்தி பேரின்புறலாம். ஊழ்வினைப் பயனால் ஏற்பட்ட கடந்த காலப் பிறப்பை அறியலாம். இனிவரும் பிறப்பையும் உணரலாம்.

இராமலிங்கசுவாமிகள்



# மாசி மாதத்தை

## பயன்படுத்திக் கொள்ளுங்கள்

செ. கந்த சத்தியதாசன் B. A.

நாம் சாப்பிடும் போது தானியங்கள் மரக்கறிகள் பழங்கள் என்பனவற்றிலிருந்து பல்வேறு போசணைப் பொருட்களைப் பெறுகின்றோம். இவற்றில் காபோவைதரேற்று, புரதம் எண்ணெய் என்பவற்றை விட மிகக் குறைந்தளவில் கனியுப்புக்கள், உயிர்ச்சத்துக்கள் (Vitamins) என்பனவும் உள்ளெடுக்கின்றோம் மரவள்ளிக்கிழங்கு போன்ற கிழங்கு வகைகளில் மாப்பொருள் அதிகமாக இருக்கின்றது. இவை நம் கண்களுக்குத் தெரிகின்றது. எள் போன்றவற்றில் எண்ணெய் இருக்கின்றது இதுவும் நமக்குத் தெரிகின்றது இதேபோல் கனியுப்புக்களும் விற்றமின்களும் இருக்கின்றது. என்றாலும் எமது கண்களுக்குத் தெரிவதில்லை. நோயில்லாத உடம்புடன் வாழவேண்டுமானால் இவ் விற்றமின்களும் கனியுப்புக்களும் மிக மிக அவசியமாகும்.

இதே போன்றே வெளிப்படையாக தம் வாழ்க்கையோடு உலகியல் தேவைக்குப் பல பொருட்கள் தேவைப்படுகின்றது வீடு, தளபாடம், உணவு, உடை என்பன நம் கண்களுக்குத் தெரியும் பொருட்களாகும். இவற்றை விட நுண்மைக்கும் நுண்மையாக கண்ணுக்குத்தெரியாத விற்றமின் போல உயிர் (பசு) ஒன்று எம் உடலுக்குள் காணப்படுகின்றது. அதற்குள்ளாக உயிர்க்குயிராக சிவபெருமான் ஒருவன் இருக்கின்றான் அல்லவா? அவனே இந்தப் பருவுடலுக்கும் உயிரிற்கும் காரணமானவன் அவனை வழிபடவே நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது. என்பதை நம்மில் பலர் மறந்து விட்டோம்.

நீ நிலை பெறப் போகிறாயா? அப்படியானால் ஒவ்வொரு நாளும் சிவாலயத்திற்குச் சென்று தொண்டு செய். பாடி, ஆடி வழிபாடு செய். என தன் நெஞ்சுக்கு அறிவுறுத்துவது போல நாவுக்கரசர் நமக்கு வலியுறுத்துகிறார்

★ மிகவும் அழகானது அன்புணர்வு. ★

"நிலைபெறுமா றெண்ணுதியேல்
நெஞ்சே நீ வா
நித்தலும் எம் பிரானுடைய கோயில் புக்கு
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்கு மிட்டு
பூமாலை புனைந்தேத்தி புகழ்ந்து பாடி
தலையாரக் கும்பிட்டு கூத்துமாடி
சங்கரா சய சய போற்றி என்றும்
அலை புனல் சேர் செஞ்சடை ஆதி என்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே" (அப்பர்)

நித்தலும் சிவாலயம் சென்று எம்மால் வழிபட முடியாவிட்டாலும் நைமித்திய காலங்களி லாவது கட்டாயம் சென்று வழிபட வேண்டுமல்லவா? வாரத்திற்கு இருமுறை வெள்ளி செவ்வாய்க் கிழமைகளில் சிவாலயம் சென்று வழிபடல் மிக அவசியம் இத்தோடு மாதத்திற்கொரு முறை வரும் கார்த்திகை, சதுர்த்தி, பூரணை, ஏகாதசி, பூரம் போன்ற நாட்களிலும் அவசியம் சென்றுவழிபடல் வேண்டும். இவற்றை விட வருடத்திற் கொரு முறை வரும் விஷேட தினங்களாகிய தைப்பூசம், மாசி மகம், மகாசிவராத்திரி, பங்குனி உத்தரம், சித்திரைப் பூரணை, வைகாசி விசாகம், ஆனி உத்தரம் ஆடி அமாவாசை...... என வரும் காலங்களில் மனிதனாகப் பிறந்த நாம்கட்டாயமாகவிரதம் இருந்து சிவாலயம் சென்று வழிபடல் அவசியமாகும். இக்காலங்களில் ஆலயம் சென்று வழிபடாதவர் களே நோய், பிணி துன்பத்திற்கு ஆளாகின்றனர்.

முன்னர் விற்றமின் பற்றிக் குறிப்பிட்டேன். நோய் வந்ததும் வைத்தியர்களிடம் சென்றால் நம் நோய்க்கு தக்கபடி பல்வேறு விற்றமின்களை குளிசையாக (pilles) தருகின்றாரே நாம் மரக்கறி, பழங்கள், தானியங்கள் என்பனவற்றில் சிறிது சிறிதாக பெறுதல் போதாது என விற்றமினைத் திரட்டி ஒரு குளிசை யாகத் தருகிறார். உடனடியாக நோய் குணமாகி விடுகின்றது.

இதே போல் விரத காலங்களில் ஆலயங்களில் இறைவனின் சாந்நித்தியம் மிக மிக அதிக மாகும் (விற்றமின் குளிசையைப் போல்) எனவே விரத காலங்களில் ஆலயத்திற்குச் சென்று விரதமிருந்து வழிபடுகின் றவர்களின் துன்பம், பிணி, நோய் என்பன சூரியனைக் கண்ட பனித் துளி போல் மறைகின்றது மேலும் உடல் நோய்க்கு வைத்தியர்கள் ஓரளவு மருந்து கொடுப்பார்கள். குணமாகும். ஆனால் உள நோய்க்கு மருந்தேது இறை

வனின் சந்நிதி தான் எந்நிதியும் தருவானே சந்நிதிக் கந்தன். எங்கே நின்மதி எங்கே நின்மதி என இளைஞர்கள், யுவதிகள். வயது முதிர்ந்தவர்கள் எல்லோ ரும் மன முறிவடைந்திருக்கிறார் களே. இவர்கள் விரத காலங் களில் குறித்த நியமத்திற்கமைய விரதமிருந்து சிவாலயம் சென்று வழிபட்டு வந்தால் மனதில் நின் மதி தோன்றும் எண்ணியது கை கூடும். என நீங்கள் அறிவதோடு உங்கள் உறவினர் நண்பர்களை யும் வழிப்படுத்துங்கள்.

இம் மாதம் மாசி மகம், மகாசிவராத்திரி என்பன வருகின் றது இவ்விரத நாட்களைத் தவற விடாதீர்கள். மாசி மகத்தில் நீர்த் தெய்வமாகிய வருணனின் வேண்டுகோளின் படி புனித நீர் நிலைகளில் நீராடுபவர்களின் பாவத்தை சிவன் அந்நீரில் இருந்தே கழுவுகின்றான். இவ் வேளையில் இன்னொரு விடயம் நாம் நீராடும் பொழுது நீரில் சிவன் இருந்து நம் பாவங்களைக் கழுவுகின்றான் கழுவவேண்டும் என நினைத்து நீராட வேண்டும் நினையாதவர்களுக்குப் பாவம் தீராது என்கிறார் அப்பர் பெரு மான்.

''கங்கை ஆடிலென காவிரி ஆடிலென்
கொங்கு தண் குமரித்துறை ஆடிலென்
ஓங்கு மாகடல் ஓதநீர் ஆடிலென்
எங்கும் ஈசன் எனாதவர்க் கில்லையே''

மேலும் மகா சிவராத்திரி அகந்தை கொண்ட பிரம்ம விஷ் ணுக்களுக்கே சிவன் அனுக்கிர கித்த தினமாகும். இந்நாளில் பசித்திருந்து தனித்திருந்து விழித் திருந்து சிவனை நினைத்துக் கொண்டிருக்க வேண்டும். அதி காலையிலேயே எழுந்துகர்மஅனு ட்டானங்களை நிறைவு செய்து சிவாலயம் சென்று தொண்டு செய்து பூசைகளைத் தரிசித்து வாயினால் இயன்றவரைதேவார திருவாசகங்களைப் பாட வேண் டும். இடையே ½ மணிநேரம் ''ஓம் நமசிவாய'' என்று பஞ் சாட்சர மந்திரத்தை உச்சரிக்க வேண்டும். சிறிது நேரம் கண்கள் சிவனை நோக்கி தியானம் செய் தல் வேண்டும். கால்கள் சிவன் கோயிலை வலம்வரல் வேண்டும் அன்று பகல் இரவு முழுவதுமே சிவனுக்கண்மையில் இருத்தல் வேண்டும். இதுவே உபவாசம் என்பதன் கருத்தாகும்.

இவ்வாறு நியம நிஷ்டை யோடு விரதமிருந்து வழிபட் டால் விற்றமின்களைத் திரட்டி தரும் வைத்தியர் போல் வைத் தியநாதனாகிய சிவபெருமானும் தனது திருவருளைத் தந்துஅடிய வனை துன்ப துயரத்தினின்றும் காப்பாற்றுவான்.

''நம்பிக்கையோடு வழிபட்டால் நலமெல்லாம் கிடைக்கும்''

★ புகழ்ச்சியை முட்டாள்களின் உணவு என்று கூறுவர். ★

[தொடர்ச்சி...

# முருக வழிபாடு

கனகசுந்தரம்பிள்ளை சசிலேகா

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகியவற்றுடன் இவற்றுக்கு மேலாக மனமும் ஆகிய ஆறையும் நினைவு படுத்துவதே ஆறுமுகமாகும் இதை விட ஆறுமுகமும் அறுவகை இறைமைக் குணங்களைக் குறிக்கின்றன. அவையாவன, முற்றறிவுடைமை வரம்பில் இன்ப உடைமை இயல்பாகவே பாசமின்மை, முடிவில் ஆற்றலுடைமை, பேரருளுடைமை தன்வயம் உடைமை ஆகியவனவாகும். சிவனுடைய முகங்களாகிய ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம், ஆகிய ஐந்துடனும் சத்தியினது ஒரு முகமாகிய அதோ முகமும் சேர்ந்து உருவாகியதே ஆறுமுகம் என்றும் கூறுவர். முருகனது பன்னிரு கரங்களும் எமக்கு ஆழமான தத்துவக் கருத்தினை விளக்குகின்றன. அதாவது மனிதர்களிடம் இரு கரங்கள் மட்டுமே உண்டு. ஆனால், அவன் விரும்பினால் மேலும் பல கரங்களைத் தன்னுடன் இணைத்துக் கொள்ளலாம் என்பதையே காட்டுகின்றது. அன்புக்கரம், பாசக்கரம், கருணைக்கரம், வீரக்கரம், அறிவுக்கரம், போன்ற கரங்களையே இணைத்துக் கொள்ளலாம். முருகன் ஒவ்வொரு கரமும் அபயகரமாகவும் வரதகரமாகவும் சேவற் கொடியை உடையகரமாகவும், பாசத்தைஏந்திய கரமாகவும் வகைவகையான ஆயுதங்களைத் தாங்கிய கரமாகவும்காணப்படுகின்றது. இது பின்வரும் தத்துவத்தினை எமக்குப் புலப்படுத்துகின்றது. அதாவது புலியினது ஆயுதம் அதன் பற்களும்நகங்களுமாகும். அதேபோல முதலையினது ஆயுதம் அதன் பற்களும் வாலுமாகும். இவைகள்என்றைக்குமேதமது ஆயுதங்களை மாற்றிக் கொள்வதில்லை ஆனால். மனிதன் தருமத்தைக் காத்து அதர்மத்தை அழிப்பதற்கு இருகரங்களிலும் வெவ்வேறுபட்ட ஆயுதங்களைப் பிரயோகிக்கலாம் என்பதையே எமக்குக் காட்டுகின்றது. முருகனது பன்னிரு புயங்களும் பதினொரு உருத்திரர்களையும் (ஏகாதச உருத்திரர்கள்) சக்தியையும் குறிக்கின்றன.

முருகனுக்கு இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி, எனும் மூன்று வகையான சக்தி

களுண்டு இவற்றில் வள்ளி இச்சா சக்தியாகவும் தெய்வயானை - கிரியா சக்தியாகவும், வேல் - ஞான சக்தியாகவும் விளங்குகின்றன. முருகனது கரத்திற் காணப்படும் ஞானசக்தியாகிய வேலானது முருகனது ஆயுதங்கள் யாவற்றிற்கும் நடுநாயகமாக விளங்குவதோடு எமக்குப் பின்வரும் தத்துவத்தினையும் எடுத்துக் காட்டுகின்றது. அதாவது எமது அறிவானது படிப்படியாக வளர்ந்து, உயர்ந்து, பரந்து, கூர்மையடைந்து இருக்க வேண்டும் என்பதையே விளக்கி நிற்கின்றது முருகன் சேவற் கொடியை உடையவனாகவும் மயில் வாகனத்தை உடையவனாகவும் காட்சியளிக்கின்றான் இவற்றுள் சேவற்கொடியானது ஆணவத்தின் சின்னமாகிய சூரபத்மனை முருகப் பெருமான் அடக்கியதை விளக்கி நிற்கின்றது.

முருகனது திருநாமங்கள் அவனது பெருமையை நமக்கு உணர்த்துகின்றன. கங்கையிலே தோன்றியமையால் காங்கேயன் என்றும் அடியார்களின் இதயக் கோயிலில் எழுந்தருளுபவன் என்பதால் குகன் என்றும் ஆறு முகங்களைக் கொண்டவன் என்பதால் சண்முகன் ஆறுமுகன் என்றும் விசாகநாரில் பிறந்தவன் என்பதால் விசாகன் என்றும் சரவணப் பொய்கையிலே தோன்றியமையால் சரவணபவன் என்றும் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப் பட்டமையால் கார்த்திகேயன் என்றும் ஆறு முகங்களும் ஒன்றாகச் சேர்க்கப் பட்டவன் என்பதால் கந்தன் என்றும் அழகும் இளமையும் உடையவன் என்பதால் முருகன் என்றும் கடப்ப மாலையை அணிந்தவன் என்பதால் கடம்பன் என்றும் மயிலை வாகனமாக உடையவன் என்பதால் மயூரன் என்றும் சிவபெருமானுக்குப் பிரணவப் பொருளை உணர்த்தியவன் என்பதால் ஞானபண்டிதன், சுவாமிநாதன் என்றும் பல் வேறுபட்ட பெயர்களால் அழைக்கப்படுகின்றான்.

ஆறெழுத்தைத் தன்னுள்ளே அடக்கிய அரியமந்திரம் சடாச்சரம். மறை என்பது மந்திரம். முருகனுக்குரியது சடாச்சர மந்திரம் அது பிரணவத்தின் விரிவாக இருப்பது. அதனால் "ஒரெழுத்தில் ஆறெழுத்தை ஓதுவித்த பெருமாளே" என்று அருணகிரியார் பாடினார். சரவணபவ என்பதே அம்மந்திரமாகும். மந்திரத்தை உச்சரிக்கும் முறை மூன்று உண்டு. அவை, மானஸம், மந்தரம், வாசிகம் என்பன. மனதுள் மந்திரத்தை எண்ணி ஜெபிப்பது மானஸ முறை.

"துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள் தொறும்

---

★ வார்த்தைகள் இதயத்திலிருந்தே வரவேண்டும். ★

வஞ்சகம் அற்றடி வாழ்த்த, வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே''

திருஞான சம்பந்தர் திருவாக்கில் ஐந்தெழுத்தை நெஞ்சகம் நைந்து நினைக்கும்மானஸ முறை குறிக்கப் பெறுகிறது. மெல்லப் பிறர் காதில் கேளாத படி நாவைப் புரட்டி உச்சரித்தல் மந்தம். வெளிப்படையாக வாய் விட்டுச் சொல்லுதல் வாசிகம். வாசிகத்தை விட மந்தம் சிறந்தது.

ஆலயங்களிலே முருகனை வழிபடும் அந்தணர்கள் பல துதிகளை வாயாரப் பாடி பிறகு ஆறெழுத்தை மந்த முறையில் உச்சரிக்கிறார்கள். ''நா இயல் மருங்கின் நவிலப் பாடி'' என்றது அதனையே கூறுகின்றது. சடாட்சர மந்திரத்தை உச்சரித்துக் கையில் மலர்களை ஏந்தி வழிபடுகிறார்கள். அபிஷேக ஆராதனைகள் முடிந்த பிறகு கையில் மலரை வைத்துக் கொண்டு வேத மந்திரங்களைச் சொல்லி இறைவன் திருவடியிற் சமர்ப்பிப்பது மரபு. இதை மந்திர புஷ்பம் என்று சொல்லுவார்கள் பூசையின் இறுதியில் நறுமலர்சார்த்தி வாழ்த்துதல் வழக்கம்.

சோழர் காலத்தில் எழுந்த கந்த புராணம் என்னும் தமிழ்ப் புராணம் சைவ சித்தாந்த மரபிலே முருக வழிபாட்டை முதன்மைப் படுத்தி எழுந்தது இதன் காரணமாகத் தமிழ்ப் பிரதேசமெங்கும் முருக வழிபாட்டு நெறியும் கந்த சஷ்டி முதலிய விரத முறைகளும் புராணபடன முறைகளும் எங்கும் வளர்ந்து வருகின்றன. நமது சமய வாழ்க்கையை வளம் பெறச்செய்யும் ஓர் அரிய சாதனமாகக் கந்த புராணம் விளங்குகிறது. கடவுட் கொள்கைகளைக் கதை மூலம் சொல்லி விளங்க வைப்பது புராணம். புராணப் படனத்தின் மூலம் ஈழத்துக்கே உரிய கந்த புராணகலாசாரம் வளர்ந்தது, வளர்ந்து வருகிறது. இலங்கை சைவர்களாகிய நாம் இப் பாரம் பரியத்துக்குரியவர்கள் என்பது நமக்குப் பெருமை தருவதொன்றாகும் இங்கும் முருக வழிபாடு தொன்று தொட்டு நிலவி வருகிறது. விஜயன் இலங்கைக்கு வந்த போது அவனைக் குவேனி கொல்ல முற்பட்ட போது கந்தன் அவனைக் காத்தானெனவும் சிங்கள மன்னனாகிய துட்டகைமுனு தமிழ் மன்னனாகிய எல்லாளனை வெற்றி கொள்வதற்கக் கதிர்காமம் சென்று பூஜித்து வந்தானென்றும் வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. கதிர்காமத்திற் கலியுக வரதனாக முருகன் அடியார்க்கு அருள் புரிகின்றான். கீழ் மாகாணத்திலே திருக்கோயிலிலும்

மண்டூரிலும் சிற்றாண்டியிலும் அவன் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளான், யாழ்ப்பாணத்தில் நல்லூர், மாவிட்டபுரம் கந்தவனக் கடவை, செல்வச்சந்நிதி என்பன பழம் பெரும் முருகன் தலங்களாகும்.

கதிர்காமத்தில் முருகனுக்குப் பூசை செய்பவர்கள் கப்புறாளைமார் என்று அழைக்கப்படுகின்றனர் இவர்கள் பூசைசெய்யும்முறை சைவ ஆலயங்களிற் பூசை செய்யும்முறைக்கு வேறுபட்டதாகும். இவர்கள் தம் வாயை மஞ்சள் நிறத் துணியினாற் கட்டிக் கொண்டு தீபாராதனை செய்து வழிபாடியற்றுவர். இவ்வாறே மண்டூர்க் கந்தசுவாமி கோவிலிலும் செல்வச்சந்நிதியிலும் வழிபாடு செய்யப்பட்டு வருகின்றது. இவ்வழக்கம் கேரள தேசத்திலும் பல கோவில்களிற் காணலாம். இது ஆகம வழிபாட்டிற்கு முற்பட்ட வழக்கமென்று கூறுவதற்கு இடமுண்டு. பின்னர் முருகனை வழிபடுவதற்கென்றே குமார தந்திரம் என்னும் ஆகம நூல் தோற்றம் பெற்றது. நல்லூரும் மாவிட்டபுரமும் சரித்திரப் பெருமை வாய்ந்த தலங்கள். நல்லூரிலே முருகன் கோவில் ஆதியிற் கோட்டை அரசன் ஆறாம் புவனேகபாகுவினாற் கட்டப்பட்டது.

மாவிட்டபுரம், குதிரை முகம் படைத்த மாருதப்புரவீக வல்லி என்ற அரசிளங்குமாரி முருகன் அருளால் குதிரை முகம் மாறப் பெற்ற தலமாகும். அதனால் மாவிட்டபுரம் என்பது காரணப் பெயராகும். இங்கு கோயில் கொண்டிருக்கும் முருகப் பெருமான் ஆடி அமாவாசை அன்று தீர்த்த உற்சவத்திற்குக் கீரிமலைக் கடற்கரைக்குப் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ எழுந்தருளுவது கண்கொள்ளாக் காட்சியாகும். செல்வச்சந்நிதி முருகன் அன்னதானக் கந்தன் எனக்கூறப்படுகின்றான். இந்த ஆற்றங்கரையானைத் தரிசிப்பதற்கென்றே பிரதி வெள்ளிக்கிழமைகளிலும்பல எண்ணிக்கையான மக்கள் வந்து செல்கின்றனர். இவ்வாலய தல விருட்சமாகப் பூவரசமரம் காணப்படுகின்றது இவ்வாலயத்திற்குச்செல்வோர்தமது துன்பத்தைப்போக்குவதோடு பசியையும் போக்கி வரக்கூடிய வகையிலே அந்த அன்னதானக் கந்தன் அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றான்.

முருகப்பெருமானுக்குரிய விரதநாட்களை நோக்கின், ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற கார்த்திகை நட்சத்திரம், சஷ்டித்திதி ஆகியனவும் வெள்ளிக்கிழமைகளும் (கந்தசுக்கிரவாரம்) முதலிய விரத நாட்கள் முருகனுக்குரியவை. ஐப்பசி மாதத்தில் வரும் கந்தசஷ்டியும் கார்த்திகை மாதத்தில் வரும் திருக்கார்த்தி

☆ பொறுமை சொர்க்கத்தின் திறவுகோல். ☆

கையும் மிகச் சிறப்பானவை. திருமுருகாற்றுப்படை, அருணகிரிநாதரால்இயற்றப்பட்டதிருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, வேல்விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம், திருவகுப்புஎன்பனவும்திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ், கந்தசஷ்டி கவசம் முதலியனவும் முருகப்பெருமானுக்குரிய சிறந்த தோத்திரப்பாடல்களாகும் ஷண்மதப் பிரதித்தாபகராகிய சங்கரர் "சுப்பிரமண்ய புஜங்கம்" என்ற சிறந்த வடமொழிநூலையும் உருவாக்கி இருக்கிறார்.

ஈழத்து முருகவழிபாட்டில் காவடி எடுத்தல் கர்ப்பூரச்சட்டி எடுத்தல் முதலிய வழிபாட்டு அம்சங்களைச் சிறப்பாகக் காண முடிகிறது. முருகனை வழிபட்டு உய்தி பெற்றோராக அருணகிரிநாதர், குமரகுருபரர் முதலியோரைக் குறிப்பிடலாம். இவ்வாறே நாமும் முருகப்பெருமானைத் தரிசித்து உய்தி பெறுவோமாக.

[ முற்றும் ]

## பிறவிப்பெருங்கடல்

ஒருவன் ஆயிரம் பவுண்களைச் சேர்த்து வைத்திருந்தான். அழகிய இளம் மனைவி, ஐந்து வயதுப் பாலகன் இவர்களுடன் இனிது வாழ்ந்தான். மழை பொழிந்து வெள்ளம் வந்து அவன் வாழ்ந்த ஊரே வெள்ளத்தில் மூழ்கி விட்டது. அவன் பவுண் மூட்டையைத் தலையிலும் மனைவியை இடது தோளிலும், மகனை வலது தோளிலும் சுமந்து கொண்டு வெள்ளத்தில் நீந்தலானான்.

மேலும் வெள்ளம் வந்து விட்டது. மூன்று சுமைகளும் அவனை அழுத்தின. ஏதாவது ஒன்றைவிட்டால் சுமை குறையும், நீந்தி அக்கரை சேரலாம் என்ற அக்கறை வந்தது. பொன் மூட்டையை விட்டான். சிறிது கனம் குறைந்து நீந்திவிட்டான்.

மேலும் வெள்ளம் வந்து விட்டது. இப்போது இன்னும்ஒன்றை விட்டாலன்றி நீந்த முடியாது என எண்ணினான் மனைவியை விடுவதா? மகனை விடுவதா? என்று சிந்தித்தான் மனைவியைத் தன் விருப்பத்தால் மணந்து கொள்ளலாம். குழந்தை தெய்வங் கொடுத்தாலன்றிக் கிடைக்காது ஆதலால் மனைவியை விட்டு விட்டான் சுமை நீங்கிக் கரை சேர்ந்தான்.

வெள்ளம் என்பது பிறவிப் பெருங்கடல், பொன்னாசை மனைவியாசை, மக்களாசை என்ற மூவாசையும் ஒன்றொன்றாக விட்டபின் முத்திக்கரை சேர்ந்தான். அநுபூதிக்கு ஆசைகள் தடை, ஆதலால் ஆசைகளை விட்டு முருகன் அநுபூதியைப் பெற வேண்டும்.

★ உள்ளத்தின் உட்சுரப்பே கவலையும், களிப்பும். ★

(தொடர்ச்சி .....

# ஔவையார் அருளிச்செய்த நல்வழி

சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க் கடல் கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும் — போவிப்பம்
பாழி னுடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி யரிசிக்கே நாம்.

ப - ரை : வயிற்றின் கொடுமையால் - வயிற்றினுடைய (பசிக்) கொடுமையினாலே, சேவித்தும் - பிறரைச் சேவித்தும், சென்று இரந்தும் - (பலரிடத்திலே) போய் யாசித்தும், தெண்நீர்க் கடல் கடந்தும் - தெளிவாகிய நீரையுடைய சமுத்திரத்தைக் (கப்பலேறிக்) கடந்தும், பாவித்தும் - (ஒருவரைப் பெரியவராகப்) பாவித்தும், பார் ஆண்டும் - பூமியை ஆண்டும், பாட்டு இசைத்தும் - செல்வரைப் (புகழ்ந்து) பாட்டுப் பாடியும், நாம் உடம்பை நாழி அரிசிக்கே பாழின் போவிப்பம் - நாம் இந்தச் சரீரத்தை நாழி அரிசிக்காகவே பாழிலே செலுத்துகின்றோம் எ - று

இ - ம். முத்திக்குரிய சாதனத்தைத் தேடும் பொருட்டு அரிதாகக்கிடைத்த சரீரத்தை அதற்குக் கொடுக்கப்படுங் கூலியாகிய போசனத்தைத் தேடும் பொருட்டே முழுமையும் செலுத்துதலில் மிக்க பேதமை பிறிதில்லை எ - ம்.

19

அம்மி துணையாக வாறிழிந்த வாறொக்குங்
கொம்மை முலைபகர் வார்க் கொண்டாட்டம் — இம்மை
மறுமைக்கு நன்றன்று மாநிதியம் போக்கி
வெறுமைக்கு வித்தாய் விடும்.

ப - ரை: கொம்மை முலை பகவார்க் கொண்டாட்டம் - குவிவாகிய தனங்களை விற்கின்ற பரத்தையரைக் கொண்டாடுதல், அம்மி துணையாக ஆறு இழிந்த ஆறு ஒக்கும் - அம்மிக்கல்லே துணையாக ஆற்று வெள்ளத்தில் இறங்கிய தன்மையைப் போலும், அன்றியும் மா நிதியம் போக்கி வெறுமைக்கு வித்து ஆய்விடும் - (அது) பெரிய செல்வத்தை அழித்து வறுமைக்குக் காரணமாய் விடும், இம்மை மறுமைக்கு நன்று அன்று - (ஆதலினால்) அது இப்பிறப்பிற்கும் வரு பிறப்பிற்கும் நல்லதாகாது எ - று

ஓடத்தினாலே கடக்கத்தக்க ஆற்றை அம்மியினாலே கடக்கப் புகுந்தவன் அமிழ்ந்து உயிரை இழத்தல் போல, மனைவியினாலே அநுபவிக்கத்தக்க இன்பத்தை வேசியினாலே அனுபவிக்கப் புகுந்தவன்

மேகநோயால் வருந்தி உயிரை இழப்பன், ஆதலின், அம்மி துணையாக வாழிழிந்தவாறொக்குமென்றார்.

இ - ம்: வேசியைப் புணர்ந்தவன் கைப்பொருளை இழந்து மேக நோயால் வருத்தமுற்றுப்பழி பாவங்களை அடைவன் எ - ம் 20

நீரு நிழலு நிலம்பொதியு நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும் ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றுந்
தருஞ்சிவந்த தாமரையாள் தான்.

ப - ரை: சிவந்த தாமரையால் - செந்தாமரை மலரில் இருக்கின்ற சீதேவியானவள் வஞ்சம் இலார்க்கு - வஞ்சனை இல்லாதவருக்கு நீரும் - நீர்வளத்தையும் நிழலும் - நிழல்வளத்தையும், நிலம்பொதியும் நெட்கட்டும் - நிலத்திலே நிறைய நெற்போரையும், பேரும் - பேரையும், புகழும் - கீர்த்தனையும், பெருவாழ்வு - பெரிய வாழ்வையும், ஊரும் - கிராமத்தையும், வரும் திருவும் - வளர்கின்ற செல்வத்தையும், வாழ் - நாளும் நிறைந்த - ஆயுளையும், என்றும் தரும் எந்நாளும் கொடுத்தருளுவள் எ - ம்

இ - ம் வஞ்சனை யில்லாதவர்க்குச் சீதேவியினது திருவருளினாலே எல்லா நலமும் உண்டாகும் எ - ம்.

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் — கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் யாரே யநுபவிப்பார் (21)
பாவிகா ளந்தப் பணம்

ப - ரை; பணத்தைப் பாடுபட்டுத்தேடிப் புதைத்து வைத்து பணத்தைப் பிரயாசைப்பட்டுச் சம்பாதித்து (நீங்களும் உண்ணாமல் பிறர்க்குங்கொடாமல் பூமியிலே)புதைத்து வைத்து, கேடுகெட்ட மானுடரே கேளுங்கள் - அப்பொருட் கேட்டினால் (சரீரசுகத்தையும் ஆன்ம சுகத்தையும் ஒருங்கு) இழந்த மனிதர்காள்! (நான்சொல்வதைக்) கேளுங்கள், ஆவி கூடுவிட்டுப் போயின பின்பு - ஆன்மா சரீரத்தைவிட்டு நீங்கிய பின்பு, பாவிகாள் அந்தப் பணம் இங்கு ஆர் அநுபவிப்பார் - பாவிகளே! அப்பணத்தை இவ்விடத்து யாவர் அநுபவிப்பார் எ - று.

இ - ம்: பூமியில் புதைத்து வைக்கப்பட்ட பணம் வைத்தவர் இறந்தபின் அவருக்கு உதவாமற் போவதுமன்றிப் புதைத்த இடந்தெரிந்து எடுக்கக் கூடாமையினாலே பிறருக்கும் உதவாமற்போம் எ - ம் 22 [ தொடரும்... ...

# ஆட்கொண்ட போது

திருமதி சி. யோகேஸ்வரி



இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட நம்பியாண்டார் நம்பியின் அனுபவத்தை முந்திய கட்டுரையில் பார்க்கும் போது, " விநாயகப்பெருமான் என்னையும் ஆட்கொள்ளக் கூடியவனாகக் கருதினாரே " என்று அவர் வியப்பதைக் கண்டோம்.

இதே போன்று இறைவனால் ஆட்கொள்ளப்பெற்றோர் பலரும் நாம் அதற்குத் தகுதியானவர்கள் தானா? என ஐயப்படுவதைக் காணலாம். ஆனால் இன்று தம்மைப் பக்தர்களாகக் காட்டிக் கொள்ள முனையும் எத்தனையோ பேரை நாம் காண்கின்றோம். உண்மையான பக்தர்கள் தம்மை இறைவன் ஒரு பொருட்டாகக் கருதியது கண்டு ஆச்சரியமடைகின்றனர்.

அபிராமிப்பட்டரின் கதை அனைவரும் அறிந்த ஒன்று. அம்பிகையைத் தியானித்துக் கொண்டிருந்த பட்டரிடம் அரசன் வந்து திதியைக் கேட்டபோது, அவர் அமாவாசை என்பதற்குப் பதிலாக அம்பிகையின் அருளொளியில் இலயித்து, பௌர்ணமி எனக்கூறிவிட்டார்.

அன்றைய தினம் பௌர்ணமி தினம் என நிரூபிக்கத் தவறும் இடத்து பட்டர் மரண தண்டனைக்கு ஆளாக நேரிடுமென்பதால் அன்னை தன் காதணியை வானிலே வீசவும் அது பூரண சந்திரன் போன்று காட்சி தந்து அமாவாசை தினத்தைப் பௌர்ணமியாகக் காட்டியது.

★ இறைவனைத்தவிர உயர்ந்த துணை வேறில்லை. ★

தன் கூற்றை மெய்ப்பித்து அரசனின் தண்டனையிலிருந்து காக்க வேண்டி அபிராமிப்பட்டர் பாடியதே அபிராமி அந்தாதியாகும்.

அவர் தன்னையும் ஒரு பொருட்டாக எண்ணி அம்பிகை தானாகவே வந்து ஆட்கொண்டதை அபிராமி அந்தாதியில் பாடி வியக்கின்றார். "என்னையும்" என்றுகூட அவர் கூறவில்லை. "நாயேனையும்" என்று தன்னை மிகவும் தகுதியற்ற ஒருவராகக் கருதிக்கூறுகின்றார். அதுமட்டுமல்ல "தாயே இவ்வளவு தகுதியற்ற என்னை ஒரு பொருளாக நயந்து வந்து நீயாகவே நினைவின்றி ஆண்டு கொண்டாய், அப்படி ஆட்கொண்டு, பேயேன் உன்னை உள்ளபடியே அறியும் அறிவையும் தந்தாய், நான் எவ்வளவு பேறு பெற்றவன்!" என அபிராமிப்பட்டர் வியக்கின்றார்.

அம்பிகை அவரை "ஒரு பொருளாகக்கருதினாள்" என்று கூறாது "நயந்து வந்தாள்" என்று கூறுவதிலிருந்து அவரை விரும்பித் தேர்ந்தெடுத்துள்ளாள் நயந்துள்ளாள் அப்படி நயந்து வந்து தானாகவே ஆட்கொண்ட போது நினைவின்றி ஆண்டு கொண்டாள். அப்படி ஆட்கொள்ளப்பட்ட பின்னர் பார்த்தால் அந்தப்பேயனுக்கு அம்பிகையை உள்ள வண்ணம் அறியும் அறிவு அம்பிகையால் அருளப்பட்டிருந்தது. அவர் எதுவும் அறியாத பேயன். அந்தப் பேயனுக்கு அம்பிகையை உணர்ந்து கொள்ளும் அறிவை அவளே கொடுக்கின்றாள். நினைவின்றி ஆட்கொள்ளப்பட்ட வேளை பேரறிவு பெற்ற அந்தப்பேறை எண்ணி அவர் வியக்கின்றார்.

நாயேனையும் இங்கு ஒரு பொருளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண்டாய். நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந்தாய். என்ன பேறுபெற்றேன்
தாயே, மலைமகளே, செங்கண் மால்திருத் தங்கைச்சியே.

என தான் அம்பிகையினால் ஆட்கொள்ளப்பட்ட வேளை பற்றி அபிராமிப்பட்டர் அபிராமி அந்தாதியில் பாடுகின்றார் அவர் வேறு பாடல்களிலும் இந்த நிகழ்வு பற்றிப் பாடியுள்ளார்

---

() சூரியனுக்கு நேரே நீ போனால் உன் நிழல் பின்புறம் விழுகிறது. எதிரே போனால் உன் நிழல் முன்புறம் விழுகிறது. நீ நேரிய வழியில் சென்றால் உன் துன்பங்கள் பின் புறமாக ஓடி விடுகிறது எதிர்த்திசையில் சென்றால் அவை முன் பக்கத்தில் காத்து இருக்கின்றன.

— கவிஞர் கண்ணதாசன்

★ தூய்மையானவனே கடவுளை மிகவும் நெருங்குகின்றான். ★

உ

சிவமயம்

# ஏழைமனம் உடைய என்னை நீள நினைக்க வைத்தான்,,

கே. எஸ். சிவஞானராஜா

சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் ஞானச்சுடர் வெளியீட்டில் உரை நிகழ்த்தும் பொருட்டுக் காலை எட்டு மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டுக்குளப்பிட்டிச்சந்தியில்பஸ்ஸிற்காகக்காத்திருந்தேன் அன்றைய தினம் பஸ்சேவை அருமையாக இருந்தது. சுன்னாகத்திலிருந்து புறப்படும் பருத்தித்துறை பஸ்ஸையும் தவறவிட்டுவிட்டேன். நேரம் பத்துமணியையும் தாண்டிவிட்ட காரணத்தினால் யாழ்ப்பாணம் சென்று பருத்தித்துறை பஸ்மூலம் சந்நிதி செல்லத் தீர்மானித்து விரைந்தேன். பதினொருமணிக்குப்புறப்பட்டமினி பஸ், சந்நிதி விரைந்தது. மனத்துக்குள் நேரம்போய் விட்டதே என்ற ஏக்கம் பஸ்ஸைத்தவறவிட்ட பாரிய தாக்கம் பத்தரை மணிக்கு எனது நிகழ்ச்சி என்பதான தடுமாற்றம். வல்லைவெளியில் நுழைந்தபோது ஏராளமான வாகனங்கள்- வீதியிலே நிறுத்தப்பட்ட நிலையில் அப்பாற் செல்ல முடியவில்லை. பாரிய வாகனம் குறுக்காக வீதியைத் தடுத்தவாறு உடைந்திருந்தது. என்னை நொந்து கொண்டேன் முருகனையும் நினைத்து, நேரத்தையும் பார்த்து எனக்கு நானே தண்டனையும் கொடுத்தேன் வாகனங்கள் மெல்ல நகர ஆரம்பித்தன. நான் பயணம் செய்த வாகனமோ என்னைப் புரிந்து கொண்டமாதிரி முந்திச் சென்று சந்நிதி வாசலில் நின்றது. முருகா எனப்பணிந்து, வணங்கி விட்டுச் சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு நிகழ்ச்சிக்காக விரைந்தேன் சுன்னாகத்தில் தவறவிட்ட பஸ் அப்போதுதான் வந்து கொண்டிருந்தது என்வேதனையைப்புரிந்து அந்தபஸ் என்னைச் சமாதானப் படுத்தி விடைபெற்றது. எனது வரவுக்காக ஆச்சிரமம் காத்திருந்தது. உரியவர்கள் புரிந்து கொண்டனர். நிகழ்ச்சி ஆரம்பித்தது. பங்குபற்றினேன் நேரம் பன்னிரண்டு மணி. சந்நிதி முருகன் அந்தநேரம், என்னைத்தன் கரங்களில் வைத்துக்காப்பாற்றியதோடு ஒருபுனிதனாகமாற்றிவிட்டதிருப்தியோடு மீண்டும் அதே பஸ்ஸில் வீடு திருப்பினேன் முருகனின் ஆட்சியை எண்ணி வியந்தேன்.

★ துன்பத்திலும் பொறுமையை இழக்காதே. ★

# முருகா என அழுதேன்

சந்நிதி நிகழ்ச்சிக்காய்ப் புறப்பட்ட எனக்குச்
சந்நிதிப் பஸ் கிடைக்கவில்லை!
நிம்மதி யற்றவனாய் யாழ்ப்பாணம் சென்றுதான்
நீள வருந்தியே பஸ்கிடைத்தது!
சம்மதித்து விட்டதனாற் சங்கடமாய் நினைத்திடச்
சாரிசாரியாய் வல்லையில் வாகனங்கள்!
நம்மதியோ திகைப்புற்றுத் தலையை நீட்டிடவே
நடுறோட்டில் பேருந்து குறுக்கே நின்றது.
எந்நிதி கொடுத்தும் போகலாமோ என்றால்
எவரையும் போக அனுமதிக்கவுமில்லை.
என்கதியை எண்ணி 'முருகா' என அழுதேன்
எம்பஸ்ஸைப் பொலிஸார் அனுமதித்தனர்.
சந்நிதியான் ஆச்சிரமமுன்பாக வந்தபோது
தவறவிட்ட சுன்னாகம்பஸ் நின்றதே!
சரியாக இரண்டுமணித்தியால 'தாமதத்தைச்'
சமாதானப்படுத்தினான் சந்நிதிமுருகன்.

---

மனிதனாகப் பிறந்தவனுக்கு எவ்வளவோ பாக்கியங்கள் உண்டு எல்லாப் பாக்கியங்களுக்கும் மேலான பாக்கியம் பிறருக்கு சேவை செய்வதே. சேவை என்று தெரியாமலே அனைவரும் நமது குடும்பத்திற்காகச் சேவை செய்கின்றோம். அத்தோடு நமக்குச் சம்பந்தமில்லாத குடும்பத்திற்கும் ஊருக்கும், நாட்டிற்கும், சர்வ தேசத்திற்கும் நம்மால் முடிந்த சேவையினை செய்ய வேண்டும். நமக்கு எத்தனையோ கஸ்டங்கள் இருக்கின்றன. நம் சொந்தக் கஸ்டத்திற்கு நடுவில் சமூகசேவை வேறா என்று எண்ணக் கூடாது உலகத்திற்கு சேவை செய்வதாலேயே சொந்தக் கஸ்டத்தை மறக்க வழி உண்டாகும் அதன் பயனாக ஒரு சித்த சுத்தியும், ஆத்ம திருப்தியும் சந்தோசமும் ஏற்பட்டு அந்த வழியில் மேலும் மேலும் செல்லத் தூண்டும்.

அர்த்தமுள்ள இந்து மதம்

---

★ வெளிச்சத்தைப் பார், விளக்கைப் பார்க்காதே. ★

தொடர்ச்சி...

# திருவருட் பயனின் வசனரூபம்

திருமதி மாதேவிப்பிள்ளை கதிர்காமத்தம்பி

## ஆறாம் அதிகாரம்

## திருவருளாகிய குருவினது அருளினால்

மெய்ஞான ஒளியை அவாவும் ஆன்மா தன் செயலை இறைவன் செயலாகவே எண்ணவேண்டும்:- பஞ்ச இந்திரியங்களுஞ் செய்கின்ற செயல்களை எல்லாந் தன்னுடைய செயல்களாகவே ஆன்மா நினைப்பது போல, தன்னுடைய செயல்கள் யாவும் இறைவனுடைய கிரியா சத்தி வழியே நிகழ்வனவாகக் கருதவேண்டும்.

ஐம்புலன்களின் இயக்கத்திற்கு ஆன்மாவின் உள் இயக்கமே காரணமாதல் போல, ஆன்மாவின் தொழிற்பாட்டிற்கு ஆன்மாவினுள் நின்று இயக்குந் திருவருளே காரணமாகும். ஆன்மா, தங்களைச் செலுத்தும் உதவியை ஐம்புலன்களும் காணாதது போல, உயிரினுள் நின்று இயக்குந் திருவருளையும் ஆன்மா அறிவதில்லை.

திருவருள் ஞானத்தைக் காணும் முறை:- திருவருள் ஞானத்தைக் கல்வியால் ஆராய்ந்து காணலாம் என்பது தவறான முடிபாகும் ஆனால் கல்வி உதவி செய்யும் ஆன்மா தன்னறிவையே திருவருள் அறிவென்று பாவித்து அதன் வழியிற் சென்றால் திருவருள் எட்டாததாகிவிடும். ஆயின் ஆன்மா இறைவனின் அருளை முன்னிட்டு அவனது அறிவு இச்சை, செயல் வழியே தனது அறிவு இச்சை செயல்களைச் செலுத்திப், பின்னின்று வேண்டுதலே திருவருளை அடைதற்கு வழியாகும். எனவே கல்வி அறிவாலும் பாவனை அறிவாலும் ஆன்மாக்கள் திருவருள் ஞானத்தைக் காணமுடியாது.

எனவே உலக விடயங்களைச் சிந்திப்பது போல, ஞானமானது எப்படி இருக்கும்? எங்ஙனம் வந்தடையும்? என்று ஆராயாது அது வருமுன் முன் சென்று கண்டு கொள்ள முயலாது, ஞானமானது தானாக வந்து தோன்றும்போது, அப்பொழுது காணுவதே முறையாகும்.

திருவருள் ஞானத்தை அடையும் முறை:- தாம் ஞானத்தை அடைந்தபின் உண்டாகும் பேரின்பமே தாம் அனுபவிக்கும் பொருளாக

நினைத்து, ஞானஒளியையே அறியுங் கருவியாகக் கொண்டு, அந்த இன்பத்துள் மூழ்கி இருந்த. ஞானத்தை அடையும் நெறியாகும்

பேரின்பங்களை நாடிய ஆன்மா, திருவருளின் குறிப்பின் வழியே செயற்பட்டு வருவதனால் தனக்கு உறுதுணையான வீட்டின்பத்தை அடையும் அதனிலும் மேம்பட்ட இன்பம் இல்லை என உணர்ந்த ஆன்மா அத்திருவருளையே சரணாக அடையும்.

ஞான நிலையை அடைந்த ஆன்மா ஞானமயமாக நிற்றல்;- மெய்யுணர்வு அடைந்த ஆன்மா. அதன் துணை கொண்டு நோக்க நோக்க அவ்வான்மாவிற்கு இறைவனிடத்தில் பேரன்பு தோன்றும் இந்தத் தளராத அன்பே இறைவனோடு ஆன்மாவைக் கலந்து அழுத்தஞ் செய்யும் இங்ஙனம் அன்பு பெருகுதலே, பேரின்ப நுகர்வைப் பெருக்குவதற்கு உதவியாகும்.

திருவருளாகியகுருவினாலே மெய்ப்பொருளை அறியும் முறைகளை மீட்டுந் தொகுத்து நோக்குவோம்:- ஒன்றை ஒன்று ஒவ்வாத புண்ணிய பாவங்கள் இரண்டையுஞ் சமமாக மதிக்கும் எண்ணம் ஆன்மாவின் உள்ளத்தில் உண்டாக, ஆணவமலவலிகெட்டு மலபரிபாகம் ஏற் படத் திருவருட்சத்தி பதிந்து சத்திநிபாதம் எய்தும்

அவ்வாறு அது ஈடேறும் பொருட்டுத் தான் செய்யும் புண் ணிய பாவங்களைத் தமக்கு ஊட்டும் கடவுளையும் தன்னாற் செய்யப் படுகின்ற புண்ணிய பாவங்களையும் அப்புண்ணிய பாவங்களினாற் செய்யப்படுகின்ற இன்பதுன்பங்களையும் பொருந்தி நிற்கும். ஆன்மா திருவருளோடு கூடி இருக்குந்தன்மை, உடம்பின்கண் உயிர் வேறுபாடு டின்றிக் கலந்து நிற்பது போன்றதாகும்.

பளிங்கானது தன்னைச் சார்ந்துள்ள பொருள்களின் நிறங் களையும் தனது நிறத்தையும் விளக்குவதற்குச், சூரியனது கதிர்கள் காரணமாக இருத்தல் போல, ஆன்மா தன்னைச் சார்ந்துள்ள பிறபொருள்களையுந் தன்னையும் அறிதற்கு. இறைவனது அறிவாற் றல்கள் காரணமாகும். தனது செயல்வழி நின்றே, தமது புலன்கள் தொழிற்படுவது போலத், தனது செயல்கள் யாவும் இறைவன் செயல்வழி நின்றே நிகழ்வன என ஆன்மா உணர வேண்டும்.

ஞானத்தை உலக விடயங்கள் போல் ஆராயாது அது ஆன் மாவை நாடி வரும் போது, முன்சென்று காணமுயலாது அதுவந்து

தோன்றிய போதே. ஆன்மா அதனைக்காண வேண்டும் ஞானத்தை அடைந்த பின் உண்டாகும் பேரின்பத்தையே அநுபவிக்கும் பொருளாக நினைத்து ஞான ஒளியையே கருவியாகக் கொண்டு இன்பத்துள் அமிழ்தல் வேண்டும். திருவருளாகிய ஞானம் எப்படி வெளிப்பட்டதோ, அப்படியே அதனைக் கண்டு, அறியாமை தோன்றா வண்ணம், ஞானத்தின் வசப்பட்டு இன்பத்தை அநுபவிக்க வேண்டும்.

அன்பர்களே! ஆன்மா மெய்ப்பொருள் அறியும் நிலையைச் சுருக்கமாகக் கூறின், நல்வினை தீவினைகளைச் சமமாக மதிக்கும் இருவினை ஒப்பு, அதன் உள்ளத்தில் தோன்றியதும், ஆணவம் வலிகெட்டு மலம் பக்குவப்பட, ஆன்மாவின் திருவருட்சத்தி பதிந்து ஆன்மாவை இறைவனிடஞ் சேர்க்கும் அப்பொழுது ஆன்மா தனது செயல்கள் யாவுஞ், சிவன் செயலாக நிகழ்வதை உணர்ந்து ஞானம் வெளிப்பட்டு வரும் போது அதனையே கருவியாகக் கொண்டு பேரின்பத்தில் மூழ்கி ஞானத்தின் வயப்பட்டு இன்பமனுபவிக்கும் என்பது தெளிவாகும்.

## ஒற்றுமை உயர்வு தரும்

ஒற்றுமை உயர்வு தரும், வேற்றுமை வேதனை தரும். ஆண்டவனுக்கு முன்னே எல்லோரும் ஒற்றுமையாக வேண்டும். மதங்கள் பல இருக்கலாம். மத வெறி கூடாது. இனங்கள் இருக்கலாம், இன வெறி இருக்கக் கூடாது. நமது வலது கை உண்கிறது, இடக்கை தூய்மை செய்கிறது. எங்காவது இடக்கை மாநில மாநாடு போட்டு, "தோழர்களே! நாம் இனிமேல் வாரத்துக்கு ஒரு நாள் உண்ணும் தொழிலைச் செய்ய வேண்டும். இந்த வலக்கை பரிசுத்தம் செய்ய வேண்டும்." என்று தீர்மானம் நிறைவேற்றுகிறதா? இறைவனுக்கு முன்னால் இரண்டு கையும் ஒன்றுபட்டு, "இறைவா! உனக்கு முன்னால் நாங்கள் ஒற்றுமையாக இருக்கிறோம் என்பதைத் தெரிவிக்கின்றன. இது நமக்கு இடக்கை தரும் பாடம்.

வாரியார்

# தமிழ் நாட்டுத் திருக்கோயில்கள்

புத்தொளி ந. சிவபாதம்

"கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்"
என்பது பழமொழி.

மேலொரு பொருளும் இல்லா மெய்ப்பொருள்
வில்லும் தாங்கிக் - கால் தரை தோய நின்று
கட்புலக் குற்றதம்மா!

எனக் கம்பர் பாடுவது போலவே தமிழ் நாட்டில் தான் ஆழ்வார்களும் நாயன்மார்களும் திருவவதாரம் செய்து கால் தரை தோய நடந்து சென்று எத்தனையோ தெய்வ தலங்களைத் தரிசித்துத் திருமுறைகளையும் திவ்வியப் பிரபந்தங்களையும் அருளிச் செய்தனர். திருக்கோவில் இல்லாதவை "திரு இல் ஊர்கள்" என்று திருநாவுக்கரசர் குறிப்பிட்டிருக்கின்றார்.

கோயில்கள் நமது பழம் பெரும் நாகரிகத்தையும் பண்பாட்டு நலன்களையும் எடுத்துக் காட்டும் அடையாளங்களாகும். பழந்தமிழ் நாட்டில் கோயில்கள் தான் சமுதாய நல அமைப்பு நிலையங்கள் என விளங்கின. சமயம், சமுதாயம், கலையியல், பொருளியல், பண்பாட்டியல் முதலிய பல துறைகளில் கோயில்கள் பெரிதும் பங்கு கொண்டு சிறப்புறுகின்றன. பல்லவ, சோழ, பாண்டிய வேந்தர்களும் விஜய நகர அரசர்களும், நாயக்க மன்னர்களும் கோயில்களின் வளர்ச்சிக்கும் அமைப்பிற்கும் அளப்பருந் தொண்டுகள் ஆற்றியுள்ளனர்.

பழங்காலத்தில் கோயில்களே பள்ளிக்கூடங்களாகவும், கலை வளர்ச்சிக்கழகங்களாகவும் அறங்கூறும் அவையங்களாகவும், அறக்கூழ்ச் சாலைகளாகவும், மருத்துவ மனைகளாகவும், மக்களுக்குத் தொழில் தரும் நிறுவனங்களாகவும், பொருள் கொடுத்தும், வாங்கியும் உதவும் நிதி நிலையங்களாகவும், மன்பதை நலம் வளர்க்கும் மன்றங்களாகவும், போர்க்காலங்களிலே படை வீடுகளாகவும் இன்ன பிறவாகவும் விளங்கி வந்தன.

நமது கோயில்கள் அயல் நாட்டு அறிஞர்களையும் கவர்ந்

தன. காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் மதிலைக்கட்டி முடிக்கக் காரணமாக இருந்தவர் ஆட்சன் என்பவர். மதுராந்தகம் கோயில் திருப்பணியை முடித்தவர் பிளேசு. பவானி சங்கமேதரர் கோயில் ஊஞ்சலை அமைத்து நன்கொடையாக வழங்கியவர் வில்லியம் காரேரி. மதுரை மீனாட்சி அம்மனுக்குத் தங்கத் தால் செய்த அங்க வடிகளை அன்பளிப்பாகத் தந்தவர் ரூஸ் பீட்டர். இவர்களின் பக்தி யையும் அன்பையும் ஆர்வத்தை யும் என்னென்பது! இத்தகைய கோயில்களே நமது அரும் பெரும் கலைச்செல்வங்களாகும்.

கோயில்களில் சமயச்சொற் பொழிவுகள், புராணப் படிப்புக் கள், தேவாரத்திருமுறைப்பாரா யணங்கள் அவ்வப்போது நடை பெறுகின்றன. அந்தந்தத் தலத் துக்குரிய தலபுராணங்கள், சிறு சிறு பிரபந்தங்கள் ஆகிய நூல் களை அச்சிட்டுப் பரப்பப்பட்டு வருகின்றன. பல கோயில்களில் பொது மக்களுக்குப் பயன்படும் பொருட்டு நூல் நிலையங்களும் இலவச வாசிகசாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. வழிபடும் பக்தர்களுக்கும் யாத்திரிகர்களுக் கும் பலப்பல வசதிகள் செய்யப் பட்டுள்ளன. பழநி, திருச்செந் தூர், சிதம்பரம் முதலிய தலங் களில் பல இலட்சம் ரூபாய் செல வில் விடுதிகள் கட்டப்பட்டுள் ளன. கோயில்களில் தூய்மையும் துப்புரவும் நிலைபெறச் செய்து பக்தியுணர்வுச்சூழ்நிலைகள் கண் காணிக்கப்பெறுகின்றன. கோயில் அர்ச்சகர்களுக்கு பயிற்சி வகுப் புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இறை பணியாளர்களுக்கும் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப் பெறுகின்றன. இவற்றால் கோயில் நடைமுறைகளும் உற்ச வம் முதலிய விசேடங்களும் சாத்திர முறைப்படி சரியாக நடைபெறுகின்றன. கோயில்கள் சார்பில் அநாதை இல்லங்கள் நடைபெற்று வருகின்றன. பள் ளிச் சிறுவர்களின் பகல் உணவுத் திட்டத்திற்குப் பல கோயில்கள் பேராதரவு புரிந்து வருவது எண்ணி மகிழத்தக்கது. திருநெல் வேலி, மதுரை முதலிய இடங் களில் பெண்கள் உயர் நிலைப் பள்ளிகளும் கோயில்களால் நடாத்தப்படுகின்றன. சீன - இந் திய யுத்தத்தின் போது கோயில் கள் தேசியப்பாதுகாப்பு நிதிக்கு ஏராளமான நன்கொடைகள் வழங்கியதுடன் மேல் மிகுதியான அளவில் தங்கப் பாத்திரங்களும் வழங்கிப் பேருதவி புரிந்திருக் கின்றன. சிற்பக்கலை வளர்ச்சிக் காக மாமல்லபுரம், சுவாமிமலை ஆகிய இடங்களில் வசதி செய்யப் பட்டிருக்கின்றது. தமிழ் நாட் டுக்கே சிறப்பாக உரிய நாதஸ் வரக்கலை குறித்துப் பழநி தேவஸ்தானத்தின் ஆதரவில் ''நாதஸ்வரப் பயிற்சி நிலையம்'' ஏற்படுத்தப்பட்டுள்ளது. பழநி ஆண்டவர் கீழ்த்திசைக் கலை

பண்பாட்டுக்கல்லூரி ஒன்றும் 1961ல் தோன்றி மூன்றாண்டு பீ. ஏ. பட்டப் படிப்புக்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் இணைப்பாக இயங்கி வருகின்றது. சமய அறிவையும் உணர்வையும் வளர்ப்பதில் இத்தகைய அமைப்புக்கள் பெரும்பங்காற்றி வருகின்றன.

தமிழ் நாட்டுக்கே உரிய சித்த மருத்துவக் கலை வளர்ச்சியினைக் குறித்துத் தஞ்சை மாவட்டத்தில் திருப்புகலூரிலும் திருநெல்வேலி மாவட்டத்தில் பண்மொழியிலும் சித்த மருத்துவ சாலைகள் தோன்றிப் பொது மக்களுக்குப் பெரிதும் பயன் பட்டு வருகின்றன. சமயவளர்ச்சியும் விளக்கமும் கருதிக் 'கோயில்' என்னும் திங்கள் இதழும் 1958 அக்டோபர் முதல் வெளிவந்து கொண்டிருக்கின்றது.

இன்று நமது ஈழநாட்டில் எத்தனையோ ஆலயங்களுக்குப் பக்தர்கள் சென்று வழிபட்டுப் பல உதவிகளைச் செய்து வருகின்றார்கள். அவ் ஆலயங்கள் பொது மக்களுக்காகச் செய்பவை யாவை?

## அறவழியில் பொருளும் இன்பமும்


பொருளுக்குத்தான் உலகில் அதிக மதிப்பு. இதைக்கொண்டு யாரும் தவறான வழியில் செல்வம் திரட்டக்கூடாது. அறத்தின் வழியே பொருள் திரட்ட வேண்டும். பிறர் அழ, அழ பொருளைச் சேர்க்கக் கூடாது. பிறரை அழ வைத்துச் சம்பாதித்தால், சம்பாதித்தவன் அழ, அழ அவன் கையை விட்டு அது போய்விடும். அறம் என்றால் தர்மம் செய்வது. அதுவும் அறத்துடன் இருக்க வேண்டும் ஒருவனுக்கு நாலணா கொடுக்கிறோம் அதைப்பெற்றுக் கொண்டவன், ஒரு கத்தரிக்கோல் வாங்கி ஊரார் பையையெல்லாம் கத்திரித்துப் பணத்தைத் திருடினால் நாம் கொடுத்ததும் வீணாகி விடும். ஆகவே தர்மம் செய்வதும் தர்மத்துடன் இருக்க வேண்டும். இன்பம் கூட தாலி கட்டிய மனைவியிடம் பெறுகின்ற இன்பமாக இருக்க வேண்டும். தவறான வழியில் வருகின்ற இன்பமாக இருக்கக்கூடாது.

பிறர் குற்றம் காணுமுன் நம குற்றம் களைவோம்.

உ

# செவ்வேற் சேய்

சிவ. சண்முகவடிவேல்



செவ்வேற் சேய் செய்ய வேலையுடைய சேய் என்பது பொருள்.

'எக்காலமும் போர் செய்தலிற் செவ்வேலென்றார். செய்யவ னென்பது சேஎயென விகாரத் தால் நீண்ட தொன்றுமாம் என் பர்' செய்யவன் - சிவந்தவன்

முருகப் பெருமானிடத்திற் பெறலரும் பரிசில் பெற்றான் ஒருவன் - தானும் அப்பரிசிலைப் பெறும் பொருட்டு.

செம்மல் உள்ளமொடு நலம் புரி கொள்கைப் புலம்பிரிந்துறை யும் செலவு நயந்து, தெருவு தோறலரும் அடியவனை முருகப் பெருமானிடத்தில் ஆற்றுப் படுத்துகின்றான். முதலில் திருப் பரங் குன்றத்தில் எழுந்தருளி யிருக்கும் முருகப்பெருமானிடத் தில் வழிப்படுத்துகின்றான் எல்லா உலகங்களிலும் எங்கு மாக நிறைந்திருக்கும் முருகப் பெருமானுடைய தொல்லுருவை முதலில் அறிமுகஞ் செய்து வைக் கின்றான் ஞானவான்களுடைய மெய்ஞ்ஞானக் காட்சிக்கும் அகப்படாத அழகனுடைய அருள் திருஉருவத்தை முன்னை நல்வினைப் பயனால் உணரப் பெற்றான். ஆதலின் பின்வரு மாறு உணர்த்துகின்றான். ஆசாரியர்களுடைய தியான பாவனையிலும் சிறைப்படுத்த இயலாத முருகப்பெருமா னுடைய மெய்வடிவத்தை- தொல்லுருவை - நவையறு காட் சியை-கற்பனை கடந்தசோதியை கருணை உருவினைக் கண்டு காட்டும் அழகே, அழகு.

ஆயிரம் ஆயிரம் புறக்கண் களாற் கண்டாலும் புலப்படா தது ஞானக்கட் பார்வைக்கும் நன்கு உணரலாகாதது ஊன்

★ எல்லாச்செயல்களாலும் ஒருவனுக்கு இன்பம் கிடைப்பதில்லை ★

கெட்டு உயிர் கெட்டு உணர்வு கெட்டு உள்ளமும் போய்த் தான் கெட்ட நிலையில் தலைப்படும் அக்காட்சியை, அவன் அருளாலே அவன் தாள் வணங்கி, அவன் அருளே கண்ணாகக் காணின் அல்லால் இப்படியன் இந்நிறத் தன் இவ்வண்ணத்தான் இவன் இறைவன் என்று எழுதிக்காட்ட ஒண்ணுமா!

காட்ட ஒண்ணாக் காட்சி கண்டுகொள்ள ஆண்டி ஏது அரசன் ஏது அந்தணர் ஏது அல்லாதவர் ஏது.

ஒன்றே குலம் - தேவனும் ஒருவனே ஆவார். பெரிய புராணம் புகலும் பேருண்மையும் அதனுள் அமையும்.

கோடி தவம் செய்த சூரபன்மனுக்குக் குமரவேட் பெம்மான் 'அழிவிலாத நம்பெரு வடிவங் கொள்வம் நன்று கண்டிடுதி என்று' காட்டினான்.

'அறிவருமுணர்தல்தேற்றா ஆறுமாமுகத்து வள்ளல் சிறிது நல்லுணர்ச்சி நல்கக்' கண்களிப்பக் கண்டான்.

திருமேனி ஒளி:- முருகப் பெருமானுடைய நவையறு காட்சியை நவிலத் தொடங்கிய பரிசில் பெற்றான், ஒளியையே முதலில் எடுத்து உரைக்கின்றான். குன்று தோறாடும் குமரனின் திருமேனி ஒளிமயமானது ஆதியும் அந்தமு மில்லா அரும் பெருஞ் சோதி மயமானது. செம்பொற் சோதியானது ஒளிக்குள் ஒளியானது சோதியுட் சோதியானது.

ஆரிருளிற் கிடந்து அழுந்தும் ஆருயிர் பேரொளி காணப் பெறின் கொள்ளும் பேரின்பத்தைப் பேசவும் வேண்டுமா? சோதியே சுடரே சூள் ஒளி விளக்கே என்று ஏத்துவார் மணிவாசகனார்.

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோற் பொன்கோட்டு
மேரு வலந்திரித லான்.'' என்று இளங்கோ அடிகள்

சிலப்பதிகாரத்தில் ஒளியை வாழ்த்துவார்.

ஒளி இவ்வுலகிற்கு இன்றியமையாது வேண்டப்படுவது ஆகும்.

ஊனிலு யிர்ப்பை ஒடுங்கி ஒள்சுடர்
ஞானவி ளக்கினை யேற்றி—''என்பர் ஞானசம்பந்தர்.

உலகத்திற்கு உறுதுணையாக விளங்கும் சூரியன் சந்திரன் அக்கினி ஆகியவற்றாற் கிடைக்கும் ஒளியிலும் மேலானது முருகப்பெருமானுடைய திருமேனி ஒளி.

"செஞ்சுடர் அனந்தகோடி செறிந்து ஒருங்கு உதித்ததென்ன
விஞ்சிய கதிர் கான்றுள்ள வியன்பெரு வடிவை நோக்கி
நெஞ்சகந் துளங்கி விண்ணோர் நின்றனர்"

கச்சியப்பர் கண்டு காட்டும் ஒளி அது.

நக்கீரரின் ஞானப்பார்வையில் அது பின்வருமாறு ஒளிரும்.

சீவான்மாக்கள் உவப்ப மகாமேருவை வலமாகத் திரிதலைச் செய்யும் எல்லாச் சமயத்தவரும் புகழும் ஞாயிற்றைக் கடலிடத்தே கண்டாற் போல இருவகை இந்திரியங்களும் தாம் செல்லுதற்குரிய பொருள்கள் மேற் சென்று தங்குதல் இல்லையாக இமைத்துப் பார்ப்பதற்குக் காரணமாக விளங்குகின்ற ஒளி முருகப்பெருமானுடைய ஒளி.

இந்த உவமைகூட முருகப்பெருமானுடைய ஒளிக்கு முற்றும் பொருந்தாது. சூரியனுடைய ஒளி பூமியிலிருந்து எத்தனையோ இலட்சம் மைல் தூரத்துக்கு அப்பாலிருந்து வருவது வருவதற்கிடையில் எத்தனையோ மாறுதல் நிகழும் காலையில் மிருதுவாக விளங்கும். உச்சிக்காலத்தில் வெம்மையுள்ளதாகும். மாலைப்பொழுதில் மாறுதல் நிகழும் இராக்காலத்திற் கண்ணிற்குப் புலப்படாதது.

முருகப்பெருமானுடைய ஒளி எக்காலத்தும் ஒரே தன்மைத்தாக இருக்கும் சூரியனுடைய ஒளி புற இருளைப் போக்கும். முருகப்பெருமானுடைய ஒளியை மனத்தால் நோக்குவார்க்கு மாயை அகலும்.

ஆதவன் அடிவானத்தில் உதிக்கும் போது ஒரே செவ்வொளியாக விளங்கும். நீலக் கடலில் அலைபுரளும். இளஞாயிற்றின் நுண்கதிர்கள் கடல் அலையிற் கலக்கும் போது பசுமை தோற்றும். பரந்த கடற் பரப்பில் பசுமையும் நீலமும் மயிலின் விரிந்த தோகையை விளக்கா நிற்கும் கடலின் மீதாகத் தோற்றும் செவ்வொளி கிளரும் இளஞாயிறு முருகப்பெருமானுடைய ஒளியை உணர்த்தும்.

அக்காட்சி கோலமாமஞ்ஞை தன்னிற் குலவியகுமரன் தன்னை மனக்கண்ணில் வருவிக்கும். அவை யாவும் ஒருங்கு அமைந்த முருகு ஒளி நக்கீரர் வாக்கில் இவ்வாறு அமையும்.

உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற இமைக்குஞ் சேண்விளங் கவிரொளி

★ அன்பு பாராட்டுவது உள்ளத்தின் இயல்பு. ★



உ

சிவமயம்

திருவாசகம்

# ஸ்ரீமத்

## சபாரத்தினம் சுவாமிகள்

தொண்டர் சபை

திருக்கேதீச்சரம் திருவாசகம் ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகளின் நூற்றாண்டு ஜயந்தி விழா எதிர்வரும் பங்குனித்திங்கள் பதினைந்தாம் நாள் 28. 03. 2004 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் சபைத் தலைவர் திருப்பணித் தவமணி சி. தியாகராசா STR அவர்கள் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து சமய விவகார இந்து கலாச்சார அமைச்சர் கௌரவ தியாகராசா மகேஸ்வரன் பா. உ அவர்கள் கலந்து சிறப்பிப்பார். (அனுமதி கோரப்பட்டுள் ளது)

### விழாவைச் சிறப்பிப்பவர்கள்

1. நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தின் குருமகா சன்னிதானம் அவர்கள்.
2. கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்ம கனானந்தா அவர்கள்.
3. இந்து சமய அபிவிருத்திக் கழகத்தின் தலைவர் சுவாமி தந்திரதேவா அவர்கள்
4. இந்து சமய விவகார இந்து கலாச்சார அமைச்சின் செயலாளர் க. பரமேஸ்வரன் அவர்கள்
5. இந்து சமய விவகார இந்து கலாச்சார அமைச்சின் மேலதிக செயலாளர் ப. க. பரமலிங்கம் அவர்கள்.

★ எப்படியாவது சிலநேரம் தனிமையில் இருந்துபார். ★

6. இந்து சமய கலாச்சார திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்கள்.

7. இந்து சமய கலாச்சார திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் குமார்வடிவேல் அவர்கள்.

8. கல்வி அமைச்சின் மேலதிகச்செயலாளர் எஸ். தில்லை நடராசா அவர்கள்.

9. கல்வி ஆலோசக நிபுணர் கலாநிதி கு. சோமசுந்தரம் அவர்கள்

10. தொண்டர் சபை உப தலைவர் திரு. வே. திருநீலகண்டன் அவர்கள்.

11. அருள்மொழி அரசி திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்கள் (அனுமதி கோரப்பட்டுள்ளது)

12. கம்பவாருதிஇ.ஜெயராஜ் அவர்கள் (அனுமதிகோரப்பட்டுள்ளது)

13. ஓம்சிவாயநம சிவகுருநாதன் அவர்கள் (அனுமதி கோரப்பட்டுள்ளது)

14, சப்பிரகமுவ பல்கலைக்கழக மொழித்துறை முதுநிலை விரிவுரையாளர் வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் எம். ஏ. அவர்கள்.

இன்னும் பலஅன்பர்களும் பிரமுகர்களும் அடியார்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்

இவ்விழாவில் ஞானிகள் சித்தர்களின் படங்கள் வரலாறு அடங்கிய சிறப்பு வெளியீடான "பக்தி மலர்" நூல் வெளியிடப்படும் இந்நூலைப் பெற விரும்புவோர் ரூ. 100 - 00 க்கான காசுக் கட்டளை அல்லது காசோலையுடன் ரூ. 12-00 க்கான முத்திரைகள் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம் முகவரி.

திரு. த. துரைராசா, செயலாளர் தொண்டர் சபை,
"திருவாசகம்" 31A ஜானகி லேன்,
கொழும்பு 04.

★ எல்லாம் அறிந்தவனும் ஏதும் அறியாதவனும் இல்லை. ★

## 2000, 2001, 2002, 2003, -ம் ஆண்டுகளில் வெளிவந்த ஞானச் சுடர் மலர்களுக்கு ஆக்கங்களை வழங்கியோரில் ஒரு பகுதியினரை கௌரவித்த நிகழ்வு





உ

# ஆக்கங்கள் வழங்கியோருக்கான கௌரவிப்பு நிகழ்வு 2004

ஞானச்சுடர் சஞ்சிகைக்கு ஆக்கங்கள் வழங்கியவர்களை கௌர விக்கின்ற இரண்டாவது நிகழ்வு 01 - 02 - 2004 ஞாயிற்றுக்கிழமை காலை 10 - 00 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம் பெற்றது. இது போன்ற ஒரு கௌரவிப்பு நிகழ்வு முதல் முறையாக 2000 ஆம் ஆண்டில் நடைபெற்றதும் வாசகர்கள் அறிந்த விடயமே.

ஆக்கங்கள் வழங்கியோரை பரிசுகள் வழங்கிப்பாராட்டி கௌர விக்கும் இந்த இரண்டாவது நிகழ்விற்கு உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ம. வ. கானமயில்நாதன் அவர்கள் பிரதம விருந்தின ராகக் கலந்து கொண்டார்கள்.

1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஞானச் சுடருக்கு ஆக்கங்கள் வழங்கியவர்கள் அனைவரும் கௌரவிக்கப்பட்ட னர். இவ்வாறு கௌரவிக்கப்பட்டவர்களை மூன்று வகைக்குள் உள் வாங்கி கௌரவிப்பு இடம் பெற்றது.

1] 1998 முதல் இன்று வரை ஆக்கங்கள் வழங்கி வருவதுடன் தொடர்ச்சியாகவும் காத்திரமானதுமான பங்களிப்பை வழங்கி வருபவர்கள்.

2] 1998 ஆம் ஆண்டு முதல் இன்று வரை ஆங்காங்கே ஆக்கங் களை வழங்கியோர்.

3] 2000 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஞானச் சுடருக்கு ஆக்கங்கள் வழங்கி வருகின்ற புதிய அன்பர்கள்.

ஆக்கங்கள் வழங்கிய அனைவருக்கும் பித்தளையிலான கண் ணைக் கவருகின்ற மகாலஷ்மியுடன் இணைந்த அகல் விளக்கு பரி சாக வழங்கப்பட்ட அதே நேரம் ஒவ்வொருவருக்கும் பொன்னாடை களும் போர்த்தப்பட்டன.

ம. வ. கானமயில்நாதன்:-

உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் மதிப்பிற்குரிய கானமயில்நாதன் அவர்கள் விழாவில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டார்கள்.

---

✶ நேர்மையாக வாழ்தலே மனிதனின் கடமையாகும். ✶

ஞானச்சுடர் சஞ்சிகையின் 1998 ஆம் ஆண்டு தைமாத மலர் முதன் முதலாக வெளியிடப்பட்ட பொழுது அதில் வாழ்த்துரை வழங்குவதற்காக வருகை தந்ததை சபையினருக்கு கானமயில்நாதன் அவர்கள் நினைவூட்டினார்கள். அப்பொழுது வெளிவந்த ஞானச் சுடர் தற்பொழுது ஆறு ஆண்டுகளில் பல்வேறு வளர்ச்சிப்படிகளுடன் ஏழாவது ஆண்டில் தொடர்ந்தும் வெளிவந்து கொண்டிருப்பதையிட்டு பத்திரிகைத்துறையைச் சேர்ந்தவன் என்ற முறையில் பெருமை யடைவதாகக் குறிப்பிட்டார்கள்.

கடந்த சில வருடங்களுக்கு முன்பு இருந்ததை விட இளைஞர் களின் செயற்பாடு மோசமாக மாறியுள்ள அதே நேரம் எமது சமூ கத்தவர்களது நோக்கங்கள் கூட திசைமாறிப் போய்க்கொண்டிருக் கின்ற இன்றைய நிலையில் தனியே ஆத்மீக விடயங்களை மட்டும் உள்ளடக்கி விளம்பரம் எதுவுமில்லாது தனித்துவமான பண்புகளு டன் ஞானச்சுடர் திங்கள் இதழாக வெளிவந்து கொண்டிருக்கின் றது என்றால் அது அற்புதமான விடயம் மட்டுமல்ல அற்புதத்திலும் அற்புதமான விடயம் எனக்குறிப்பிட்டார்கள்.

**புத்தொளி ந. சிவபாதம் அவர்கள்:-**

கௌரவித்து பரிசுகள் வழங்கப்பட்டவர்கள் சார்பில் பதிலு ரையை புத்தொளி ந. சிவபாதம் அவர்கள் வழங்கினார்கள். ஞானச் சுடர் சஞ்சிகை பொதுவாக எழுத்தாளர்களை ஊக்குவிப்பதுமட்டு மன்றி பெண் எழுத்தாளர்களையும் இளம் எழுத்தாளர்களையும் உள்வாங்கி அவர்களையும் ஊக்குவித்துக்கொண்டிருப்பதன் முக்கியத் துவத்தை சபையினருக்கு எடுத்துக் கூறினார்கள்.

அதுமட்டுமன்றி ஒரு எழுத்தாளனுக்கு இவ்வளவு சிறப்பான கௌரவம், பாராட்டு, ஊக்குவிப்புப் பரிசு என்பன எல்லாம் வேறு எங்கும் வழங்கப்படுவதில்லை என்றும் இதுவித்தியாசமான ஒரு கௌரவிப்பு நிகழ்வு என்பதையும் சபையினருக்கு எடுத்துக்காட்டி னார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு சிறந்த பத்திரிகையாளன் மூலம் நாம் பாராட்டப்பட்டு பரிசுகள் பெற்றது தமக்கு பெரும் மகிழ்ச்சி தருவதாகவும் குறிப்பிட்டார்கள்.

**செயலாளர்:-**

பேரவையின் செயலாளர் திரு. ந. அரியரத்தினம் அவர்கள் ஆக்கங்கள் வழங்கியோரை கௌரவிக்கும் நிகழ்வின் முக்கியத்து

வத்தை சபையினருக்கு எடுத்து விளக்கினார்கள் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை ஞானச்சுடரை வெளியீடு செய்தாலும் இது பிரகாசித்து ஒளிபரப்புவதற்கு ஆக்கங்கள் வழங்குகின்ற அன்பர்களின் பங்களிப்பு மகத்தானது என்பதை சபையினருக்கு எடுத்துக் காட்டினார்கள். ஆக்கங்கள் வழங்கிக் கொண்டிருப்போரின் தொடர்புகளை மேலும் ஆழமாக்குவதற்கு இவ்வாறான விழாக்கள் பயனுடையதாக அமையுமென்பதையும் சுட்டிக்காட்டினார்கள்.

ஏழாவது ஆண்டின் தை மாத மலர் வெளியீடும் கௌரவிப்பு நிகழ்வும் ஒரே நாளில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது தைமாத மலருக்கு மதிப்புரை வழங்கிய ஆசிரியர் ஆ. சிவநாதன் அவர்கள் ஆக்கங்கள் வழங்கிய அன்பர்களுக்குப் பொன்னாடைகள் போர்த்திக் கௌரவிக்க உதயன் பத்திரிகையின் பிரதமஆசிரியர் திரு. ம. வ. கானமயில்நாதன் அவர்கள் பரிசில்களை வழங்கி நிகழ்வினை சிறப்படையச் செய்தார்கள்.

### பாராட்டு நிகழ்வில் பங்குபற்றிய அன்பர்கள்

சிவ. மகாலிங்கம்
வ. குமாரசாமி ஐயர்
வை. க. சிற்றம்பலம்
சிவ. சண்முகவடிவேல்
ந. சிவபாதம்
க சசிலேகா
க. சிவசங்கரநாதன்
ஆ. கதிர்காமத்தம்பி
சி. யோகேஸ்வரி
இராசையா ஸ்ரீதரன்
க. கதிர்காமநாதன்
செல்வி செ. செல்வறஞ்சனா
கு. ரவீந்திரன்
Dr. V. பாலகிருஷ்ணன்
கந்த சத்தியதாசன்
வசந்தா கந்தசாமி
சந்திரலீலா நாகராஜா
கே. எஸ். சிவஞானராஜா
சி. செல்லமுத்து

கு. தியாகராஜசர்மா
வதிரிவாசன்
க. மாணிக்கவாசகம்
சச்சிதானந்த ஆச்சிரமம்
இ. சரவணபவன்
கு. குணாளன்
செ. ஞானசபேசன்
செல்வி அ. ஆனந்தராசா
காரை எம். பி. அருளானந்தம்
மாதேவிப்பிள்ளை கதிர்காமத்தம்பி
நயினை விஜயன்
ஆ. கதிரமலைநாதன்
திருமதி கௌரி சுரேசன்
மு. வேதாரணியம்
சி. சரவணன்
ஆ. சிவநாதன்
ஆர். வி. கந்தசாமி
கு. கலாநந்தினி
செல்வி வலஜி சிவஞானராஜா
பு. கதிரித்தம்பி
ஐ. கோ. சந்திரசேகரம்
சி. பாலமுரளி
நா. நவராஜ்
இராம ஜெயபாலன்
மு. கந்தசாமி

ஆச்சிரமப்பணிகளுக்கு உதவி புரிய விரும்புவோர்.
கீழே உள்ள முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.

**செ. மோகனதாஸ்**
**சந்நிதியான் ஆச்சிரமம்**
**தொண்டைமானாறு.**
**க. இல. டு. 7481**
**இலங்கை வங்கி, பருத்தித்துறை**
**T.P.NO. 0212263406**

ஓம்

# சந்நிதியான்

-ந. அரியரத்தினம்-



சந்நிதி ஆலயம் ஒரு சந்நிதிதானம் அங்கே பல்வேறு வகைப்பட்ட காரணங்களுக்காக மக்கள் ஒன்று கூடுகின்றனர் அதே போன்று பல்வேறு முறைகளில் வழிபாடும் செலுத்துகின்றனர். அதுமட்டுமன்றி சந்நிதி ஆலயத்தில் இவ்வாறு பல்வேறு வகைப்பட்ட மக்கள் பல்வேறு காரணங்களுக்காக ஒன்றுகூடி தமது இஸ்டப்படி பல்வேறு வகைப்பட்ட முறைகளில் வழிபாடு செய்வது மட்டுமன்றி அத்தகைய அடியவர்கள் எல்லோரும் உடலாலும் உள்ளத்தாலும் இன்றும் பயன் அடைந்து கொண்டிருப்பதையும் நாம் காணமுடிகின்றது.

இவ்வாறு சந்நிதியானிடம் தஞ்சமடைந்து அவனது திருப்

பாதங்களை நினைந்துருகி பல மெய்யடியார்கள் ஈடேற்றம் அடைகின்ற அதே நேரம் சில அடியவர்கள் எம்பெருமானுடைய திருப்பாதங்களுக்குத் தம்மை முழுமையாக அடிமையாக்கி அந்த ஆலயத்திலேயே சரியைத்தொண்டுகளில் ஈடுபட்டு தமது வாழ்நாளை எம்பெருமானுக்காகவே அர்ப்பணிக்கின்ற நிகழ்வுகளும் காலம் காலமாக நடந்து வருகின்றன.

இந்த வகையில் சந்நிதியானுக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து அவனது திருப்பாதங்களுக்கு தம்மை அடிமையாக்கி ஆலயத் திருத்தொண்டிற்காக தமது வாழ்நாளை முழுமையாக அர்ப்பணித்துச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் அசாதாரண அடியார்கள் பற்றியும் நாம் அறிந்து கொள்வது அவசியமானது.

இதனை இன்னொரு வகையிலும் குறிப்பிடலாம். தூய சிந்தனையுடன் முருகப்பெருமானை தினமும் வழிபாடு செய்து வந்த காரணத்தால் வலை வீசி மீன் பிடித்தொழிலில் ஈடுபட்டு வந்தாலும் மருதர் கதிர்காமருக்கு எம்பெருமான் காட்சி கொடுத்து அவரை ஆட்கொண்டு அவர் மூலம் தனக்கு ஆலயம் அமைத்து அவரையே நெய்வேத்தியம் செய்து பூசை செய்யச் சொன்னது போன்ற அதிசயம் இன்றும் நடந்து வருவதையே இங்கே நாம் குறிப்பிடுகின்றோம்.

சந்நிதி ஆலயத்தில் தற்பொழுது பல அன்பர்கள் சரியைத் தொண்டுகளில் ஈடுபட்டு வந்தாலும் இங்கே நாம் குறிப்பிடுகின்ற அந்த அன்பர் முழு நிறைவாகவே தனது தொண்டினை மேற்கொண்டு வருகின்றார். ஆலயத்திற்கு எம்பெருமானை தரிசிக்கச் செல்லுகின்ற அடியவர்கள் நாம் குறிப்பிடுகின்ற அந்த அன்பரை பலமுறை சந்திக்க நேர்ந்தாலும் அவரை எவருமே இனம் கண்டு கொள்ள முடியாத வகையில் அவரின் திருத்தொண்டுகள் இடம் பெற்றுக்கொண்டிருப்பது தான் அதிசயமான விடயம்.

பூசை நேரங்கள், அபிஷேக நேரங்கள், உற்சவ காலங்கள், விஷேட உற்சவ தினங்கள், இரவு நேரத்தில் இடம் பெறுகின்ற பூசைகள், அதிகாலையில் இடம் பெறும் சில விஷேட பூசைகள் பொங்கல்கள் என்று எந்த நேரத்தில் ஆலயத்தில் எம்பெருமானுக்கு பூசைகள் ஆராதனைகள் இடம் பெறுகின்றதோ அந்த நேரங்களில் எல்லாம் இந்த அன்பர் அங்கே தன்னுடைய பங்களிப்பை ஏதோ ஒரு வகையில் மேற்கொண்டபடி இருப்பார்.

★ எழுத்திற்கு அகரமும், உலகிற்கு இறைவனும் முதலாகும். ★

பூசைகள் எதுவும் இடம் பெறாமல் ஆலயம் அமைதியாக ஒய்ந்திருக்கின்ற சில சூழ்நிலை களையும் நாம் சிலவேளை சந்நிதி ஆலயத்தில் காணமுடியும் ஆனால் இந்த குறிப்பிட்ட அன்பரைப் பொறுத்தவரை அத்தகைய நேரங்களில் கூட ஆலயத்தின் மண்டபத்தில் உள்ள பிரமாண்டமான அந்த குத்து விளக்கை பூசித் துடைத்து மினிரச் செய்வதிலோ அல்லது கூட்டித் துப்பரவு செய்ய வேண்டிய இடங்களைக் கவனித்து அவற்றைக் கூட்டிப் பெருக்குவதிலோ அல்லது இது போன்ற ஏதோ ஒரு கைங்கரியத்தில் ஈடுபட்டுக் கொண்டேயிருப்பார் உண்மையில் இவர் ஒரு வித்தியாசமான தொண்டர் இவர் ஆற்றுகின்ற தொண்டுகளை எவைஎன்று எவருமே குறிப்பிட்டுக்கூற முடியாது எவை எவை ஆலயத்தில் ஆற்றப்பட வேண்டுமோ அவற்றை எல்லாம் அவர் தேவை கருதி காலம் கருதி மேற்கொண்டு வருவதையே எம்மால் நோக்கமுடிகின்றது.

இவ்வளவு இணைப்பையும் பிணைப்பையும் சந்நிதியானுடன் ஏற்படுத்திக்கொண்டு மிகவும் அமைதியாகவும் அடக்கமாகவும் எளிமையாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்த அன்பரைப் பொதுவாக யாருமே இவர் இன்னார் என அறிந்து கொள்வது மிகக்கடினமான விடயமாகும். நாம் குறிப்பிடுகின்ற அந்த அன்பர் இவர் தான் என இங்கே நாம் இதுவரை குறிப்பிட்ட தகவல்களிலிருந்து யாரும் அறிந்திருந்தால் அது பாரட்டப்பட வேண்டிய விடயமே. அல்லது இத் தொடரை அடுத்த ஞானச்சுடர் சஞ்சிகையில் நாம் முடிக்கும் வரை உள்ள காலப்பகுதியில் ஆலயத்திற்கு செல்கின்ற அடியார்கள் அந்த அன்பரை இனம் கான முயற்சிப்பது கூட வரவேற்கக் கூடிய விடயமே

(தொடரும்...

## பெரிய மனிதன்

கையில் பெருவிரல் தனியே நிற்கிறது. மற்ற எல்லா விரல்களும் சேர்ந்து இருக்கின்றன. அதுபோல பெரிய மனிதன் எப்போதும் ஒதுங்கியே வாழ்வான். சில்லறைகள் எப்போதுமே ஒன்றாகச்சேர்ந்து கொள்ளும்.

***

★ மனிதர்களில் அறிவுக்கண் உள்ளவனே சிறந்தவன். ★

[தொடர்ச்சி...

# 17 - 02 - 2002-இல் இருந்து
# நித்திய அன்னப்பணிக்கு உதவி புரிந்தோர்
# விபரம்

| | |
|---|---|
| செல்வகுமரன் இணுவில் மேற்கு 1 மூடை அரிசி | 3000 ... |
| மதனசுந்தரம் ஸ்ரீதரன் வல்வெட்டித்துறை | 15000 ... |
| R. சிவசுப்பிரமணியம் இரும்பு மதவடி வதிரி | 1 மூடை அரிசி |
| மு. க. ஆறுமுகம் நவிண்டில் | 1000 — |
| க. விக்னேஸ்வரன் திக்கம் | 1000 ... |
| S. ஆறுமுகம் மூலம் சாம்பியாசந்நிதி அடியவர்கள் | 25, 000 |
| வசீகரன் வாசுகி வறணி | 3000 |
| வ. துரைராஜா மூர் வீதி வெள்ளவத்தை | 3000 ... |
| Dr. G. பவானி | 15000 ... |
| கிருஸ்ணா வண்ணார்பண்ணை | 1 மூடை அரிசி |
| அறுபத்துமூவர் குருபூசைமடம் 6 மூடை அரிசி 1 மூடை சம்பா 1 மூடை பருப்பு புளி | |
| இ. தாமோதரம்பிள்ளை தாவடி | 1000 ... |
| ஐ. மார்க்கண்டு P M. கொழும்பு | 3000 ... |
| ஜமுனா தவமணிநாயகம் மல்லாகம் | 500 ... |
| சோ. மோகனதாஸ் மல்லாகம் | 500 00 |
| கணேசரெத்தினம் வசீகரன் | 25,000 |
| அப்புத்தளை சுந்தரம் | 2 மூடை அரிசி |
| ஆறுமுகம் இராசதுரை கைதடி கிழக்கு | 1 மூடை அரிசி |
| செல்வி திலகவதி பெரியதம்பி பருத். 50 Kg பூசணி | 1 மூடை அரிசி |
| பொ. இராமலிங்கமூர்த்தி நவிண்டில் | 1000 00 |
| ஜெகதலப்பிரதாபன் கனடா கெருடாவில் | 10,000 |
| Dr. உதயசிலன் தொண்டைமானாறு | 2000 00 |
| சி. கணேசமூர்த்தி அல்வாய் | 1000 00 |
| S. மிகிந்தலா கட்டைவேலி கரவெட்டி | 1000 00 |
| வைரமுத்து செங்கோ குடும்பம் இடைக்காடு | 500 00 |
| இராமநாதன் இடைக்காடு | 300 00 |
| சொ. செல்லத்துரை பருத்தித்துறை | 2 மூடை அரிசி 1000 |
| த. தர்மலிங்கம் குடும்பம் இடைக்காடு | 1500 00 |
| S. செல்வராசா குப்பிளான் | 2000 00 |
| அன்பர் கரவெட்டி | 2000 00 |

★ வெளிச்சத்தைப் பார் விளக்கைப் பார்க்காதே. ★

# பங்குனி மாத வாராந்த நிகழ்வுகள்

05-02-2004 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை :- T. M. வாசகர் (உரும்பராய்)

**விடயம் :- " வயலின் இசை "**

தம்பு சற்குருநாதன் :- வயலின்
K. பார்த்தீபன் :- மிருதங்கம்
எஸ். ராஜா :- முகர்சிங்
V. பானுதீபன் :- தபேலா

---

12-02-2004 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

## மாணவர்களின் கலை நிகழ்வுகள்
## ( யா / அத்தியார் இந்துக் கல்லூரி நீர்வேலி )

---

19-02-2004 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை :- இ. மகேஸ்வரராஜ் ( ஆசிரியர் வயாவிளான் ம. ம. வித் )

**சொற்பொழிவு :- பெரியபுராணம் (தொடர்)**

வழங்குபவர் :- சிரேஷ்ட விரிவுரையாளர் அ. குமாரவேல்
( யாழ் / கல்லூரி வட்டுக்கோட்டை )

---

26-02-2004 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

# ஞானச்சுடர் மாத வெளியீடு
# பங்குனி - 2004

வெளியீட்டுரை - ஐ. செல்வராஜா ( ஆசிரியர் நெல்லியடி மத்திய மகா வித். )
மதிப்புரை :- ஐ. சண்முகலிங்கம் ( குப்பிளான் சண்முகம் )
[ ஆசிரியர் நெல்லியடி மத்திய மகா வித். ]

---

**தவத்திரு வே. முருகேசு சுவாமிகளின்
6-ம் ஆண்டு குருபூசைத்தினம் 29-03-2004 திங்
கட்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெறும்.**

# வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் (2004 - ஜனவரி - ஒக்டோபர்) வெளியிடப்படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோறுக்கு வழமைபோல் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்ட பின் அது பற்றிய முடிவுகள் 2005 ஜனவரி மலரில் வெளியிடப்படும்.

# அன்பான வேண்டுகோள்

மலருக்கு பொருத்தமான, தரமான சொந்த ஆக்கங்களை இலகு தமிழில் எழுதி எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயபெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்

ஆக்கங்களை வழங்கும் அன்பர்கள் ஆக்கங்களில் தங்கள் முகவரியினையும் தருமாறு வேண்டுகின்றோம்.

மலர்க்குழு :

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

பதிவு இலக்கம்: Q.D./58/NEWS/2003